விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 03 சனிக்கிழமை (18.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

ராஜபக்ஷ அரசில் மனித உரிமைகள் மோசம்

# சீர்செய்வதற்கான வாய்ப்பு ஐரோப்பிய ஒன்றியத்திடம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழ் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மிகவும் மோசமடைந்துவரும் நிலையில், மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகித்து தற்போதைய நிலைவரத்தை மாற்றியமைப்பதற்கான மிக முக்கிய வாய்ப்பு ஐரோப்பிய ஒன்றியத்தின் வசமுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## 2022ஆம் ஆண்டு நாவலர் ஆண்டாக பிரகடனம்



03

## கொரோனா 22 பேர் பலி


(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட் 15

‘இதுவே முடிவு, ஆனால் ஆரம்பமும்கூட’

## இராமர் பாலத்தில் சீனத் தூதுவர்



(மன்னார்)

இது முடிவு மாத்திரமல்ல, ஆரம்பமும்தான். இராமர் பாலத் தடியில் நின்று கொண்டு சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்களாக வட மாகாணத்தின் 15

‘ஒமிக்ரோன்’ திரிபால்

## ஆபத்தை நோக்கி நாடு பயணிக்கிறது

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

ஒமிக்ரோன் தொற்றாளர்கள் கண்டறியப்படும் சூழலில் பொது மக்கள் சுகாதார ஆலோசனைகளை கடைப்பிடிக்காமல் செயற்படும்போது நாடு பாரிய ஆபத்தான நிலையை நோக்கி செல்லக்கூடும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் சொன்னாலும் அதிகாரிகள் கேட்பதில்லை

கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டத்தில் சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

காணிகள் விடயத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அமைச்சர்கள் வந்து வழங்க சொன்னாலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வன 15

உரும்பிராய் தெற்கில்

## விபரீத முடிவெடுத்த இளம் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தெற்கில் விபரீத முடிவெ 15

## கொரோனா +715

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான 15

## ஒமிக்ரோன் தொற்றாளர் ஒருவர் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளார்

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த



(கொழும்பு)

இலங்கையில் ஒமிக்ரோன் திரிபு உறுதிப்படுத்தப்பட்ட மூவரில் ஒருவர், நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக பிரதி சுகாதார சேவை பணிப்பாளரான விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் 15

## வலி.வடக்கில் காணி சுவீகரிப்பு எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது

03ஆம் பக்கம் பார்க்க

## சீனா, இந்தியா அபிவிருத்தியால் வடக்கு மக்களுக்கே நன்மை

வவுனியாவில் அமைச்சர் வாசுதேவ



(வவுனியா)

வடக்கில் சீனாவும் இந்தியாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள் 15

## மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவையின் தலையீட்டின் மூலம் மாகாண சபை தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் நிமல் ஜி புஞ்சிஹேவ தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நவாலியில் வீடு புகுந்து தாக்குதல் சந்தேகத்தில் மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.நவாலிப் பகுதியில் கடந்த புதன்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடாத்திய சந்தேகத்தின் பேரில் மூவர் யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 2 கூரிய வாள்கள் மற்றும் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலி தேத்தா மரத்தடி வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் புதன்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் குழு தாக்குதல் நடாத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது.

வீட்டின் கதவு, யன்னல்களை உடைத்தும் வாளால் வெட்டியும் அட்டகாசம் புரிந்த குறித்த குழு பெற்றோல் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டது. சம்பவத்தில் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரையாகி கடும் சேதங்களுக்கு உள்ளானது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றைய தினம் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நவாலி பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பிடாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-18.33)

# இனப்பிரச்சினை தீரும்வரை நாட்டுக்கு விடிவே கிட்டாது

## ராஜித சேனாரத்ன வலியுறுத்து

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால் மட்டுமே இந்நாட்டுக்கு எதிர்காலம் உண்டு. இன ஐக்கியம் இல்லாவிட்டால் ஒரு போதும் நாட்டை அபிவிருத்தி நோக்கி அழைத்துச்செல்ல முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொள்வதற்கு தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ், முஸ்லிம் மக்களுடன் நாம் எவ்வளவு சகோதரத்துவத்துடன் வாழ்கின்றோம் என்பதில் தான் இந்த நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. இன ஐக்கியம் இல்லாவிட்டால் எந்தவொரு நாட்டையும் கட்டியெழுப்ப முடியாது.

எமது நாட்டில் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தினர். அதனால்தான் நாடு முன்னேறவில்லை. எனவே, இனியாவது பொது இணக்கப்பாட்டுக்கு வந்து பேச்சு நடத்தி, பிரச்சினையை தீர்க்காவிட்டால் இந்நாட்டுக்கு எதிர்காலம் இல்லை.

இதனை நான் 70 முதல் வலியுறுத்தி வருகின்றேன். அதற்காக குண்டு தாக்குதலும் நடத்தினர். இன்றும் அதையே சொல்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

# அம்பாறை திருக்கோவிலில் பிள்ளையார் சிலை விசமிகளால் சேதம்

(அம்பாறை)

அம்பாறை - திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் பொத்துவில் பிரதான வீதியிலுள்ள கஞ்சிகுடிச்சாறு சந்தியில் குடியிருப்புக்கள் இல்லாத பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் பியசேன, பிள்ளையார் சிலை ஒன்றை அமைத்ததையடுத்து அதனை அந்த பிரதான வீதி ஊடாக பயணிக்கும் மக்கள் வழிபட்டு வந்தனர்.



நேற்று முன்தினம் இரவு குறித்த பிள்ளையார் சிலையின் கை, தும்பிக்கை போன்றவற்றை இனந்தெரியாத விசமிகள் உடைத்து சேதமாக்கியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# மாநகர மேயர்களில் மணிவண்ணனை சிறந்த செயல்வீரனாக மக்கள் பார்க்கின்றனர்

## முன்னாள் எம்.பி சரவணபவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிகக் குறுகிய காலத்தில் மாநகர மக்களின் மனதில் மேயர் மணிவண்ணன் இடம்பிடித்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை. மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணம் வீசினால் அதைச் சொல்லத் தயங்க வேண்டியதில்லை. மாநகர மேயர்களில், சிறந்த செயல் வீரனாக மணிவண்ணனை மக்கள் நோக்குகின்றார்கள். அந்த உண்மையை ஒப்புக்கொள்வதால் எந்தவொரு பின்னடைவும் எமக்கு ஏற்படப்போவதில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் பட்ஜெட் கடந்த 15 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது பட்ஜெட்டை கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர். ஆனாலும் பட்ஜெட் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் மணிவண்ணன் மேயராக தொடர்ந்து பதவி வகிக்கவும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறானதொரு நிலையில், பட்ஜெட் வாக்கெடுப்புத் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியை எதிர்ப்பதுதான் பணி என்று நினைக்கக்கூடாது. மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தும் செயற்படவேண்டும். அதே போன்று எதிரணியையும் அரவணைத்துச் செல்லும் வகையில், அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்காதவாறு மாநகர சபை பட்ஜெட்டை மேயர் முன்வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறானதொரு நிலையில், அவரால் முன்வைக்கப்படும் பட்ஜெட் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டிருக்குமாக இருந்தால், மக்களின் கோபங்கள் அதனைத் தோற்கடித்தவர்கள் மீதே திரும்பும். அந்தப் பழியை கூட்டமைப்பு காலாகாலத்துக்கும் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கும். அதிஷ்டவசமாக, கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்திருந்தாலும் பட்ஜெட் வெற்றி பெற்றிருக்கின்றது.

முன்னைய மேயர் இ.ஆனோல்ட், சபை உறுப்பினர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியே கடந்த ஆண்டு பட்ஜெட்டை முன்வைத்திருந்தார். அவரை அரசியல் ரீதியான காரணங்களை முன்னிறுத்தி, இப்போதைய மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர் தோற்கடித்திருந்தார்கள். அதற்குப் பழிவாங்கும் வகையில், மணிவண்ணனை தோற்கடிப்பது பொருத்தமானது அல்ல. மணிவண்ணன், ஆனோல்ட் விடயத்தில் செய்தது தவறு என்றால் அதே தவறை எமது கூட்டமைப்பு உறுப்பினர்களும் செய்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்த விடயத்தில் கட்சித் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்து செயற்பட்டிருக்கவேண்டும் என்றார். (ம)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

### 2022 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், பொதுமலசலகூடம், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர) | மாத வாடகை (VAT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் பொதுச சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,291,225.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 170,335.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் பொதுமலசலகூடம் | 750.00 | 7,500.00 | 63,745.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை (வாகனதரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 25,346,997.50 | |
| 6 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 198,550.00 | 250.00 |
| 7 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 66,619.75 | |
| 8 | மல்லாகம் சந்தை | 750.00 | 2,000.00 | 52,250.00 | |
| 9 | மயிலங்காடு ஆட்டிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

01. காலம் :- 23.12.2021 மு.ப 10.00 மணி
02. இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**


# வவுனியா பேராறு நீர்த்தேக்கம் அமைச்சர் வாசுதேவவினால் திறப்பு

(வவுனியா)

வவுனியா நீர் வழங்கல் திட்டத்திற்கான குடிநீர் வழங்கலுக்காக சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் 1400 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பெற்ற பேராறு நீர்த்தேக்கத்தினை நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (ம-299)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் காணி சுவீகரிப்பு; எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**வலி.வடக்கு பிரதேசத்தில் படையினரின் தேவைக்காக நில அளவைத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட காணி சுவீகரிக்கும் முயற்சி எதிர்ப்பு போராட்டத்தை அடுத்து கைவிடப்பட்டது**



வலி.வடக்குப் பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மழைக்கு மத்தியிலும் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கீரிமலை ஜே/226,காங்கேசன்துறை மேற்கு,ஜே/223 பகுதிகளில் 21 பேருக்கு சொந்தமான சுமார் 30 ஏக்கர் காணிகளை படையினரின் தேவைக்காக சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



குறித்த எதிர்ப்புப் போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த்தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகரசபை, வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதிப் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் காணி அளவீடு செய்யும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றனர். (4-5-18-33-104)

## சிக்கப்போகும் ஸ்ரீலங்கா

**ஐ.ம.ச பகிரங்க எச்சரிக்கை**

(கொழும்பு)

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மார்ச்சில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் ஸ்ரீலங்கா தொடர்பில் இம்முறை கடுமையான நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போது பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார். "சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி ஸ்ரீலங்கா போன்ற நாடுகளால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக்கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின் போது நாம் அதனைச் செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மகிந்தவைப் பாதுகாத்தோம். ஆனால், இந்த அரசால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாதுள்ளது என கிரியெல்ல தெரிவித்தார். (நி-5)

# 2022 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆண்டு; பிரதமர் மகிந்த தலைமையில் பிரகடனம்

(கொழும்பு)

சைவத் தமிழ் உலகிற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன ஆண்டான 2022ஆம் ஆண்டை "நாவலர் ஆண்டு" என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனம் செய்வதற்கான தீர்மானத்தை அங்கீகரிக்கும் நிகழ்வு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரகடனத்திற்கான அங்கீகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் பிரதமரினால் அங்கீகாரக் கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த பிரகடன நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர்களான எஸ்.தில்லை நடராஜா மற்றும் சாந்தி நாவுக்கரசன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் வே.கந்தசாமி, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி)

# கையடக்கத்தொலைபேசிகளுக்கு அடிமையாகும் பிள்ளைகள்

**அதில் இருந்து படிப்படியாக அவர்களை விடுவிக்க வேண்டும் என்கிறார் உளவியல் மருத்துவ நிபுணர்**

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகி இருக்கும் பிள்ளைகளை அதிலிருந்து படிப்படியாக விடுவிக்க வேண்டும். பிள்ளைகள் இணையதளத்தின் மூலம் எவ்வாறான விடயங்களை மேற்கொள்கிறார்கள் என்பது பற்றி பெற்றோர்கள் தேடிப் பார்ப்பது அவசியமென உளவியல் மருத்துவ நிபுணர் மகேஷன் கணேஷன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட் பெருந்தொற்று கடந்த இரண்டு வருடகாலமாக தொடர்வதனால் பிள்ளைகள் உளவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ளனர்.

முடக்கநிலை அமுலில் இருந்த காலப்பிரிவில் பாடசாலைகளுக்குச் செல்லாது வீட்டில் இருந்த போது மாணவர்கள் அதிகளவான உளவியல் பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

பாடசாலைகளில் புத்தகக் கல்வியை மாத்திரமல்லாது சமூகத்தில் ஏனையோருடன் எவ்வாறு பழகுவது என்பதையும் மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

கொவிட் தொற்று நிலையினால் ஏனையோருடன் இணைந்து செயற்படும் அனுபவம் மாணவர்களுக்குக் குறைவடைந்துள்ளது.

குறித்த காலப் பிரிவில் நண்பர்களுடனான தொடர்பு குறைவடைந்ததனால், தொலைபேசி போன்ற உபகரணங்களுக்கு இசைவாக்கம் அடைந்துள்ளார்கள்.

எனவே கையடக்கத்தொலைபேசிகளுக்கு அடிமையாகி இருக்கும் பிள்ளைகளை அதிலிருந்து படிப்படியாக விடுவித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயற்சி

**15 இலங்கையர்களுக்கு எதிராக இந்தியப் புலனாய்வு அதிரடி நடவடிக்கை**

(டில்லி)

இந்தியாவிற்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 15 இலங்கையர்கள் மீது தேசிய புலனாய்வுப் பிரிவு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு புத்துயிரூட்ட முயற்சித்ததாகவும், இலங்கைக்கு எதிராக போரில் ஈடுபட்டதாகவும் கூறியே இவர்கள் மீது இந்திய தேசிய புலனாய்வு பிரிவு குற்றம் சுமத்தியுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலர் இந்த ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி அரபிக்கடலில் மீன்பிடிக் கப்பல் ஒன்றிலிருந்து கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த கைது சம்பவத்தின் போது அவர்களிடமிருந்து பெருந்திரளான போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் என்பனவும் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை தொட்டிலடி சந்தி பகுதியில் நேற்று 19 வயதுடைய இளைஞர் ஒருவர் 320 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சித்தங்கேணி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக சித்தங்கேணி மதுவரி திணைக்களத்தினர் தெரிவித்தனர். (4-5-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா பிறீமியர் லீக்

# 102 ஓட்டங்களால் ஜப்னா கிங்ஸ் வெற்றி

### வியாஸ்காந்த் மூன்று விக்கெட்டுக்கள்

லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின், 17ஆவது லீக் போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணியை ஜப்னா கிங்ஸ் அணி 102 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டொம் கட்மோர் 92 ஓட்டங்களையும் உபுல் தரங்க 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் நவீன் உல் ஹக் 3 விக்கெட்டுகளையும் துஸ்மந்த சமீர மற்றும் ஜெப்ரி வண்டர்சே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



அதனையடுத்து 194 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி, ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சைச் சமாளிக்கமுடியாது தடுமாறி, 15.5 ஓவர்களிலேயே 91 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, ஜப்னா கிங்ஸ் அணி 102 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் டொம் பன்ரொான் 30 ஓட்டங்களை எடுத்தார்.

ஜப்னா கிங்ஸ் அணியின் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்டுகளையும், இந்தத் தொடரில் தனது முதலாவது போட்டியில் விளையாடிய வியாஸ்காந்த் 3 விக்கெட்டுகளையும் மகேஸ் தீக்சன 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜப்னா கிங்ஸ் அணியின் டொம் கட் மோர் தெரிவானார். இந்த வருட எல்.பி.எல். தொடரில் 7 போட்டிகளில் விளையாடியுள்ள ஜப்னா கிங்ஸ் அணி 6 இல் வெற்றி பெற்று 12 புள்ளிகளோடு புள்ளிப் பட்டியலில் முதலிடத்திலுள்ளது.(4-6)

## ஆசிய மெய்வல்லுநர் போட்டி சண்.தயாளன் தெரிவு



வளர்ந்தோருக்கான ஆசிய மெய்வல்லுநர் போட்டிக்கு இலங்கை சார்பாக சண்.தயாளன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 11 ஆம், 12 ஆம் திகதிகளில் சுகததாச விளையாட்டு மைதானத்தில் ஆசிய மட்ட தெரிவுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 60 வயது தொடக்கம் 65 வயதுப் பிரிவினருக்கான ஈட்டி எறிதல் மற்றும் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார்.

ஈட்டி எறிதல் போட்டியில் 32.54 மீற்றர் தூரம் எறிந்தும், கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 2.20 மீற்றர் பாய்ந்தும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று ஆசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் வளர்ந்தோருக்கான ஆசிய மட்ட போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-90)



யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் சொந்த நிதியில் நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த விடிவெள்ளி விளையாட்டுக் கழகத்திற்கு சீருடைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம் : ரவிசாந்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2471

**ஆன்தர்சினி**

அங்க பாருங்க 2022 வேகமா வந்திட்டு இருக்கு



இருடா எனக்கும் ஒரு மாறி பதட்டமாக தான் இருக்கு. வரட்டும் பார்ப்போம்...

**அன்றுக்ஷன்**

ரேசன் கடை வரிசையில் நிற்கும் போது..




**கிருஷிகா**

ஐயா மூனு மாசமா என பொண்டாட்டி என்கூட பேசுறது இல்லை அதனால் எனக்கு டைவர்ஸ் குடுங்க



ஒன்னுக்கு ரெண்டு வாட்டி யோசிச்சிக்கோ. இதுமாதிரி பொண்டாட்டி கிடைக்கிறது அபூர்வம்

**ஐறீன்**

என்ன எல்லாருக்கும் கல்யானமாகுது நமக்கு மட்டும் ஆக மாட்டேங்குது



ஓஹ் புரிஞ்சு போச்சுடா ஏற்கனவே நிறைய பிரச்சனை இருக்கிற நமக்கு புதுசா ஒரு பிரச்சினைய குடுக்க வேண்டாம்னு கடவுள் நினைக்கிறார்_போல

**தாரணி**

மனைவி : வடகொரியாவில் 10 நாட்களுக்கு சிரிக்க தடை செஞ்சி இருக்காங்களாம்



கணவன் : கல்யாணம் ஆன நாள்ல இருந்து என்னைய அப்டி தான்டி வச்சிருக்க

**செர்லின்**

பொண்ணுங்க ஆசிரியரிடம் அடி வாங்கும் போது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**18.12.2021,**
**மார்கழி 03, சனிக்கிழமை**
**சதுர்த்தசி காலை 8.08 மணிவரை**
**ரோகினி பிற்பகல் 2.47 மணிவரை**
**சுபநேரம் 3.23-4.53 மணிவரை**
**இராகுகாலம் 9.23-10.53 மணிவரை**
**சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்**
**பூரணை விரதம், அமிர்த சித்தம்**

**வளவன்**

**மேஷம்** – தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**ரிஷபம்** – குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** – மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** – உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் , காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** – தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, கௌரமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** – புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**துலாம்** – எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** – பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூல முண்டு.

**தனுசு** – போசன நன்மையுண்டு, செய்தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மகரம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, செய்தொழில் வளர்ச்சி கருதி ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**எல்லாப் போர்களுக்கும் முடிவு சமாதானமே**

# அத்தியாவசிய மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு

## நிலைமை படுமோசம் என்கிறார் ராஜித

(கொழும்பு)

நாட்டில் 32 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், விஷப் பாம்பு தீண்டினால் ஏற்றப்படும் ஊசி மருந்துகூட இல்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் 52 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றன என்று பாராளுமன்றத்தில் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அவற்றில் 32 வகையானவை அத்தியாவசிய மருந்துகளாகும். புதிய நிலவரம் மோசமாக உள்ளது. தட்டுப்பாட்டு நிலைமை அதிகரித்துள்ளது.

ஆனால், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என அரச மருந்தாக்கல் கூட்டுதாபனம் கூறுகின்றது.

உண்மை நிலவரம் மருந்து களஞ்சியப் பிரிவுக்கே தெரியும்.

குறிப்பாக விஷப் பாம்பு தீண்டினால், நோயாளி வைத்தியசாலைக்குக் கொண்டுவந்த உடனேயே அவரின் உயிரைப் பாதுகாப்பதற்கு ஏற்றப்படும் 'என்டி வெனம்' என்ற ஊசி மருந்துகூட இல்லை. எனவே, விஷப் பாம்பு தீண்டி வைத்தியசாலைக்கு சென்றால் உயிரிழக்க வேண்டிய நிலைமையே காணப்படுகிறது என ராஜித தெரிவித்தார். (நி-5)




## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி (ஓட்டோ) சங்கம் (தலைமையகம்)

### அறிவித்தல்

**வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.மு.தர்மகுலராசா அவர்கள் தலைமையில் 19.12.2021 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டப மேல் மாடியில் சுகாதார விதிமுறையைப் பின்பற்றி நடைபெறும். எனவே இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அனைவரும் முகக்கவசம் அணிந்து சுகாதார விதிமுறையைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

**நிகழ்ச்சிகள்**

1) இறைவணக்கம்
2) தலைமையுரை
3) செயலாளர் அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்.
4) பொருளாளர் வரவு-செலவு அறிக்கை சமர்ப்பித்தல். (2020,2021)
5) விசேட பிரதிநிதிகள் உரையாற்றுதல்
6) அங்கத்தவர் கருத்துரை வழங்கல்
7) நிர்வாக குலைவு
8) புதிய நிர்வாகத் தெரிவு
9) எதிர்கால செயற்பாடு தொடர்பில் தீர்மானித்தல்

(9115)

**40, முனீஸ்வரன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**நிர்வாகம்**



## நன்றி நவிலல்

**அமரர் திருமதி நல்லபிள்ளை முருகேசு**



மண்ணுக்கு 23.07.1929
விண்ணுக்கு 19.11.2021

எனது தாயார் அமரர்.திருமதி.நல்லபிள்ளை முருகேசு (1929-2021) அவர்கள் சில மாதங்கள் நோயுற்று இருந்த வேளை வந்து பார்த்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் 19.11.2021 அன்று அதிகாலை சிவபதமெய்தியமையினை அறிந்து நேரில் வந்து கலந்து தேற்றியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் அஞ்சலியுரை நிகழ்த்தியவர்களுக்கும் பலவகையிலும் வேண்டிய உதவிகளை நல்கிய உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து துயரத்தில் பங்கு கொண்டு உதவிகள் நல்கிய சகோதர, சகோதரிகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அபரக்கிரியையினை சிறப்பாக நிகழ்த்திய குருக்களுக்கும் எனது தாயாரின் குடும்பத்தின் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தாயாரின்வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(8965)

'சந்நிதி'
16/6, ஏழாலை கிழக்கு, ஏழாலை.

தகவல்:-
முருகேசு கௌரிகாந்தன் (மகன்)
தொ.பே:- 077 483 6307


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் "யாவர்க்கு நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை "தமிழர் வாழ்வியலில் தமிழ் மருத்துவம்" எனும் தலைப்பில் ஆயுள் வேத மருத்துவர் சிவரூபன் அனுஷியாவினால் நடத்தப் பெறவுள்ள கருத்தமர்வில் அனைவரும் பங்கேற்று பயன் பெறுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID-89985282023, Passcode 354485 ஆகும். (4-5)

# சபரிமலை செல்லும் யாத்திரிகர்கள் மலேரியா தடுப்பு மருந்தை பெறுங்கள்

## பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

**மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாகத் தடுப்பு மருந்துகளை உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியாத் தொற்று ஏற்படுவதைத் தடுக்கலாம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனவே சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது யாழ். பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொ.பே.இல 021-2227924) தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும்.

யாத்திரை நிறைவுற்றதில் இருந்து ஒரு வருடத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று தங்கள் யாத்திரை தொடர்பான விபரங்களை மருத்துவரிடம் வழங்குவதுடன் மலேரியா நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-33-60)

## சமாதான நீதிவானாக சத்திய பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை கோட்டக்கல்வி பணிப்பாளர் சிவசிதம்பரம் நற்குணலிங்கம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேமசங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நெல்லியடியைப் பிறப்பிடமாக கொண்ட இவர் கரவெட்டி மத்தியஸ்த சபையில் 10 வருடங்களுக்கு மேலாக தவிசாளராக செயற்பட்டவர். மேலும் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப தலைவருமாவார். (4-5-60)

# பாத யாத்திரையாக சென்ற பக்தர்கள் மீது மோதியது மோ.சைக்கிள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன் புலவு பகுதியில் அமைந்துள்ள ஐயப்ப ஆலயத்திற்கு பாத யாத்திரையாக சென்ற ஐயப்ப பக்தர்கள் மீது தனங்கிளப்பு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மோட்டார் சைக்கிள் மோதியதில் இரண்டு பக்தர்கள் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இதில் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 33 வயது ச.ஜெகதீஸ்வரன்,21 வயது ம.கிசாந்தன் ஆகிய ஐயப்ப பக்தர்களுடன்,மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நாவற்குழி த்ச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞனும் படுகாயமடைந்தார்.

காயமடைந்த மூவரும் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு நகர சபையினருக்கு கடிதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக மணற் கொள்ளையர்களால் இரவு வேளையில் வீதியில் மணல் அகழப்படும் சம்பவம் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் நகரசபைக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில், கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தம்பு தோட்டம் படை முகாம் முன்பாக உள்ள விவசாய காணிகள் நிறைந்த வீதியிலேயே அண்மைக் காலமாக இரவில் மணல் அகழப்படுகிறது.

தொடர்ச்சியாக மணல் அகழ்வதால் அவ் வீதி ஊடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன் மாரி காலத்தில் நீர் தேங்கி நிற்கும் அபாயமும் நிலவுகின்றது. எனவே நகர சபையினர் குறித்த வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுப்பதுடன் சட்டவிரோதமாக மணல் அகழும் செயற்பாட்டினையும் தடுத்து நிறுத்தி எமது விவசாய நிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கடிதப் பிரதிகளை வடமாகாண ஆளுநர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் அனுப்பி வைத்துள்ளனர். (4-5-30)



யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தினை சூழவுள்ள பகுதியில் உள்ள வாய்க்கால்களில் கழிவுகள் தேங்கியுள்ளமையால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி காணப்பட்டது.

இந்நிலையில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் துரித முயற்சியினால் குறித்த வாய்க்கால் பகுதி துப்பரவு செய்யப்பட்டு, அதில் தேங்கிய வெள்ள நீர் வழிந்தோட கூடிய வழி சமைக்கப்பட்டது. இவ்வாறு சுத்தம் செய்யப்படுகின்ற போதிலும் பொது மக்களின் பொறுப் பற்ற செயல் தொடருமானால் மீண்டும் அப்பகுதியில் வெள்ளநீர் தேங்கும் நிலை காணப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(படம்:-கஜிந்தன்)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிவான் நீதி மன்றினால் அரசுடமையாக் கப்பட்ட, உரிமை கோரப்படாத கையடக்கத் தொலைபேசிகள், மின் மோட்டர்கள், மின் பாவனைப் பொருட்கள், கோடரிகள் என்பன எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப் படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத் திரத்துடன் வருகை தர வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 360 | 350 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 900 | 950 | 850 | 1000 |
| தக்காளி | 550 | 400 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 50 |
| கோவா | 360 | 300 | 450 | 400 |
| கரட் | 300 | 480 | 520 | 550 |
| பூசணி | 60 | 70 | 60 | 80 |
| புடோல் | 320 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200-250 | 280 |
| பெரிய வெங்காயம் | 260 | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 500 | 900 | 780 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 140 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 380 | 450 | 400 |
| பீற்றூட் | 250 | -- | -- | 300 |
| கறிமிளகாய் | 600 | 800 | -- | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 360 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 350 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 180 | -- | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 40 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | -- | 120 |

# குடியிருப்புக்குள் நுழைந்த முதலை பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி-பெரியமாவடிப் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை முதலை ஒன்று-குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

சுமார் பத்து அடி நீளமான குறித்த முதலையை பிரதேச இளைஞர்கள் பிடித்துக் கட்டியதுடன் -இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் முதலையை கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் முறிகண்டி புலிக்[illegible] விடுவித்தனர். (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு தட்டுப்பாட்டால் மூடப்படும் உணவகங்கள்

(கொழும்பு)

**உள்நாட்டு திரவ பெற்றோலியம் (LP) எரிவாயு தட்டுப்பாடு காரணமாக இன்று சனிக்கிழமை முதல் 80 சதவீதத்திற்கும் அதிகமான சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்கள் மூடப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.**

மரக்கறி விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக சந்தையில் எரிவாயு தட்டுப்பாடு பிரதான பிரச்சினையாக மாறியுள்ளதாக அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்தார். சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள்தங்கள்சேவைகளை தொடர முடியாத நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக மரக்கறி மதிய உணவு பொட்டலங்களின்விலை 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கடும்போக்குவாத இஸ்லாமிய அமைப்பை உடன் தடை செய்க

### ஞானசாரர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை வாழ் இஸ்லாமிய மக்களுக்கு அடிப்படைவாதத்தை போதிக்கும் அதற்கு தலைமை வகிக்கும் தப்லிக் ஜமாத் அமைப்பை தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதி உள்ளிட்ட இஸ்லாமிய நாடுகள் தப்லிக் ஜமாத் போன்ற அமைப்புகளை தீவிரவாத அமைப்பு என்ற அடிப்படையில் தடை செய்துள்ள நிலையில், இலங்கையில் அந்த அமைப்புகளின் செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொதுபலசேனா



அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (நி-5)


## பொது அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலக பிரதேச மக்களிற்கான பொது அறிவித்தல்**

கொக்குவில் உப அலுவலக கட்டடம் புனரமைப்பு வேலைகள் செய்ய இருப்பதால் எதிர்வரும் 2021.12.22 ஆம் திகதி புதன் கிழமை முதல் நல்லூர் பிரதேச சபையின் 20/5 கருவப்புலம் வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலக கட்டடத்தில் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**ப.மயூரன், தவிசாளர், நல்லூர் பிரதேச சபை.**
**தொடர்புக்கு 021 222 2700**
(C-3279)


## எரிவாயு சிலிண்டர்களை மாற்றும் போது கட்டணம் வசூலிக்க வேண்டாம்

### எரிவாயு நிறுவனங்களுக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கை தர நிர்ணய நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மாத்திரம் சந்தைக்கு விநியோகிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் எரிவாயு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

எரிவாயு பிரச்சினைக்கு எதிரான மனு நேற்று வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

SLSI தரத்தை பூர்த்தி செய்யாத, சந்தையில் வெளியிடப்பட்ட எரிவாயு சிலிண்டர் களை திரும்பப் பெறுமாறும் எரிவாயு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், இலங்கை தர நிர்ணய நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட புதிய எரிவாயு சிலிண்டர்களை மாற்றியமைக்கும் போது நுகர்வோரிடம் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என எரிவாயு நிறுவனங்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்த மனு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 2022 ஜனவரி 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 35¼ செவ், சூரி 12 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ் PR உண்டு பதிவுத் திருமணத்துடன் விவாகரத்து பெற்றவர்<br>எதிர்பார்ப்பு: பதிவுத்திருமணத்துடன் விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக் கொள்ளப்படும்<br>தொ.இ: B/12200 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்: 5'1'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது உள்நாடாயின் அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12096 |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: அத்தம் 1<br>உயரம்: 176 cm<br>கி.பா: 13½ சூரி, செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர் (பட்டதாரி) உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12040 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 54¾ செவ், சூரி 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: PQHRM Diploma SeniorExecutive officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (அரச, தனியார் உத்தியோகம்) வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12098 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 53 செவ் 7 சூரி 11 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் : Dialog Company<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12041 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 57 செவ் 7 சூரி 5 இல்<br>தகைமை/தொழில்: Pharmacy Technician BSc (Hon)<br>எதிர்பார்ப்பு: படித்த பண்புள்ள மணமகன்<br>தொ.இ:G/12099 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 79¼ செவ் 8 சூரி 8 இல்<br>உயரம்: 185 cm<br>தகைமை/தொழில்: BSc (Nursing) Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள் அரச தொழில் சைவபோசனம் (அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/12044 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: செவ் 5 சூரி 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: உணவு விஞ்ஞானமும் போசாக்கும் பட்டதாரி MSc படிக்கிறார்<br>எதிர்பார்ப்பு: டாக்டர்<br>தொ.இ:G/12202 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**Department of Interdisciplinary Studies,**
**Faculty of Engineering,**
**Ariviyalnagar, Killinochchi**
**WALK -IN – INTERVIEW**

Walk in interview for the post of **Draughtsman (on Contract)** will be held on 21.12.2021 at 01.30 p.m at the Board Room of this University, Thirunelveli, Jaffna.

**Qualifications:**
Qualification in Draughtsmanship obtained at a Draughtsman examination of a government department or from a recognized institute.

**Age:** Not more than 40 years

**Note:**
1. Preference will be given to candidates with experience of at least six months and good communications skills in English.
2. Selected candidate will be attached to the Department of Interdisciplinary Studies, Faculty of Engineering, University of Jaffna, Ariviyalnagar, Killinochchi.

**SALARY** –Rs.39,425[fixed per month]

Candidates are requested to appear with certificates testifying your academic and other professional qualifications/experiences, NIC and duly filled **application form**.

Application form and other particulars for the above post can be downloaded from the University website - www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna.**
(C-3277)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය
இலங்கையின் பிரதம அமைச்சர்
Prime Minister of Sri Lanka

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது 200ஆவது பிறந்த நூற்றாண்டு நிகழ்வுகளிற்கான பிரதமரின் அங்கீகாரம்

சமூகத்தில் உள்ளவர்கள் ஆன்மிகத் துறையிலும் நற்பண்பிலும் மேம்பட வேண்டுமாயின், அதற்கு அவர்கள் தமது மத அனுட்டானங்களைச் சரிவரப் பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் தமது சமய வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்களின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பவர்களாகவும் அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

இலங்கை நாட்டு மக்கள் தமது சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் மீள நம்பிக்கை கொள்ளுமாறு அஞ்சா நெஞ்சோடு அரும்பணி ஆற்றிய வண. மிகெட்டுவத்தே குணானந்த, வண. அநகாரிக தர்மபால போன்ற தேசியப் பெருமக்களுக்கு பௌத்தமத வரலாற்றிலே தனித்துவம் மிக்கதோர் இடம் உண்டு. இந்தத் தேசியப் பெருமக்கள் வரிசையிலே, இலங்கையில் வாழுகின்ற சைவசமய மக்களிடையே சமய. கலாசார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சைவத் தமிழ் மக்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து, கலாசார மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் போற்றப்பட வேண்டியவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்து 200 வருடங்கள் (18.12.1822) ஆகின்ற நிலையில், எதிர்வரும் ஆண்டினை, "நாவலர் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை நினைவு கூர்ந்து அவரது சமய, கல்வி மற்றும் சமூகப்பணிகளை முன்னெடுக்கும் பல்வேறு செயற்பாடுகளை , இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் இச்செயற்பாடுகளிற்கான அங்கீகாரத்தையும் அதற்கான முழு ஆதரவினையும் வழங்குவதை, இலங்கைத் திருநாட்டின் சமய சக வாழ்வுக்கான நல்லதொரு சமிக்ஞையாகவே கருதுகிறேன். இந்த நிகழ்ச்சித் திட்டம் சிறப்புப் பெற வாழ்த்துகிறேன். இலங்கை மாதாவின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் ஒற்றுமையோடு இந்த நாட்டைச் சுபீட்சம் அடையச் செய்வோம். சமய சக வாழ்வு அதற்கு ஒரு கருவியாக அமையட்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர்

## 'நாவலர் ஆண்டு' - பிரகடனத்தை ஏற்று, பிரதமரால் அங்கீகாரக் கடிதம் வழங்கிவைப்பு






ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது பிறந்த ஆண்டினை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் எதிர்வரும் ஆண்டினை நாவலர் ஆண்டாக முன்மொழியப்பட்ட பிரகடனத்தை ஏற்று, அது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் பிரதமர் அவர்களால் அதற்கான அங்கீகாரக் கடிதம் வழங்கிவைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்விலே, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுரேன் ராகவன் அவர்கள், பிரதமரின் இணைப்புச் செயலாளர் திரு. கீதநாத் காசிலிங்கம் அவர்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாட் பணிப்பாளர்கள் திரு.எஸ்.தில்லைநடராஜா அவர்கள் மற்றும் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள், திணைக்கள ஆலோசனைச் சபை உறுப்பினர் கலாநிதி. கு.இரகுபரன் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் திரு.சி.தனபாலா அவர்கள், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் செயலாளர் திரு.வே.கந்தசாமி அவர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உறுப்பினர்கள் திரு.பெ.சுந்தரலிங்கம், திரு. ஜீ.வி.சுப்பிரமணியன், திரு.து.விக்னேஸ்வரன், திரு. ஏ.பீ. ஜெயராஜ், திருமதி. ஹேமலோஜனி குமரன் ஆகியோர் எனப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரகடன நிகழ்விலே, பிரகடனத்திற்கான அங்கீகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் கௌரவ பிரதமர் அவர்களால் அங்கீகாரக் கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்விலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகப்புகழ் புகழ் பெற்ற ஓவியர் திரு. மு. பத்மவாசன் அவர்களால் தத்ரூபமாக வரையப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவப் படைப்புகள் இரண்டு, பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களால் சமயத்தலைவர்கள் மற்றும் சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.



### சமய சகவாழ்வு தேசமெங்கும் மலரட்டும் !

இலங்கைத் திருநாட்டிலே. சமய சகவாழ்வு நோக்கிய பயணம் என்பது மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளமை மகிழ்வுதரக்கூடிய ஒரு விடயம். நாட்டில் உள்ள சகல மதத்தவரும் தங்களின் மத அனுட்டானங்களைப் பின்பற்றுவதற்கான சுதந்திரமும் அதற்கான அங்கீகாரங்களும் பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களின் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

சைவத்தமிழ் மக்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் அவதாரம் நிகழ்ந்து, எதிர்வரும் ஆண்டு இருநூறாவது ஆண்டாக அமையவுள்ளது. அதனை முன்னிட்டு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினை நாவலர் பெருமான் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

இதற்கான முழுமையானதொரு அரச அங்கீகாரத்தினை இந்த நாட்டின் அரச தலைவர் வழங்கியமையை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன். நாவலர் பெருமானுக்காக முன்னெடுக்கப்படவுள்ள நிகழ்வுகள் சிறப்புற நிகழ்ந்தேற இறை ஆசி வேண்டி, வாழ்த்தி மகிழ்கின்றேன்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
*குரு முதல்வர்,*
*இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*



### மீண்டும் ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திடுவோம்!

இலங்கைத் திருநாட்டின் பிரதமர் அவர்களின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினை நாவலர் பிறந்து இருநூறாவது ஆண்டு என்ற வகையிலே நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இத்தகு செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் அளித்து, சமய சக வாழ்வினை இந்த நாட்டிலே ஸ்திரப்படுத்தப் பாடுபடும் பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களையும் இத்தகைய நல்ல செயற்பாடுகளைத் திறம்பட முன்னெடுக்கின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தையும் பாராட்டி மகிழ்வதோடு இந்த வேளையிலே நன்றியையும் கூறிக்கொள்கின்றேன்.

எமது மண்ணிலே சமய மறுமலர்ச்சியைத் தந்த நாவலர் பெருமானுக்கு நாவலர் ஆண்டிலே நாம் முன்னெடுக்கப் போகும்செயற்பாடுகள் மீண்டும் இந்த மண்ணிலே மறுமலர்ச்சிக்கு வித்திடவேண்டும். நாட்டின் எதிர்காலம் சுபீட்சம் மிக்கதொரு வாழ்வாக மலர வேண்டும். சமய சகவாழ்வுக்கு நாவலரின் எண்ணங்கள் வலுச்சேர்க்க வேண்டும். இவை எம்மண்ணில் நிகழ்ந்தேற நாவலர் ஆண்டு நல்லதோர் வழி சமைக்கட்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா**
*பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர்*



### நாவலரின் எண்ணங்கள் ஈடேற நல்லதோர் ஆரம்பமாக அமையட்டும்!

கௌரவ பிரதமர் அவர்கள் இந்த நாட்டின் சமய விவகாரங்களுக்கான தலைவர் என்ற வகையிலே வழங்கியுள்ள அங்கீகாரமும் அதற்கு ஏற்றாற் போல இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'நாவலர் ஆண்டு' என்கின்ற பிரகடனமும் காலத்தின் தேவையறிந்த செயல் என்ற வகையிற் பாராட்டுகின்றேன். இது நாவலரின் எண்ணங்கள் ஈடேறுவதற்கான நல்லதோர் ஆரம்பமாக அமையட்டும்.

சைவ சமயத்தின் சாராம்சத்தை - அதன் தன்மையை - சைவம் நமக்குச் சொல்லும் வழி என்ன என்பது பற்றி நம்மவர்க்கு உணர்த்தி - சைவ சமயத்திற்கும் நம் தமிழ் மொழிக்கும் மீட்டுருவும் புதிய வடிவமும் கொடுத்த பெருமகனின் எண்ணங்களும் கனவுகளும் முழுமை பெற முன் அவரது இவ்வுலக வாழ்வு நின்றுபோனது.

உண்மையில் எங்களுடைய சமூகம் மீண்டெழ நாவலரைப் பற்றுக்கோடாய்க் கொள்ளவேண்டும். கடந்த காலத்து மனோபாவங்களிலிருந்து எம்மை நாமே முற்றாக மீட்டுக்கொண்டு அறிவு பூர்வமாகச் செயற்பட வேண்டும். கல்வியின் பயனாகிய சிந்தனை வழியாக நாம் வாழப் பழகவேண்டும். நாவலருடைய எண்ணங்கள் ஈடேற வேண்டும் என்றால் அவருடைய எண்ணங்கள் மற்றுஞ் சேவைகளுக்குச் செயலூக்கம் தரவேண்டும். அது பிரகடனப்படுத்தப்பட்ட நாவலர் ஆண்டிலே நாவலருடைய எண்ணங்களாக ஈடேற வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**பேராசிரியர் சி. பத்மநாதன்**
*வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.*



### நாவலர் பெருமானின் எண்ணங்கள் நனவாகட்டும்!

சைவத் தமிழ் உலகில் நாவலர் பெருமானுக்கென்று ஒரு தனித்துவமுண்டு. ஈழத்தில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியாகவும் நாவலர் பெருமானின் எண்ணங்களுக்கும் கனவுகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து நாவலரியலின் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் எமது சபையினர் என்பது எமக்கு எப்போதும் மகிழ்வளிக்கும் விடயம்.

நாம் எல்லோரும் பெருமைகொள்ளும் விதத்தில் நாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன வருடத்தினை நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்திய இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தையும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கிய அரசினையும் சைவத்தமிழ் மக்கள் அனைவரினதும் சார்பாக, நாவலர் சபையினராகிய நாம் தலைவணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

நாவலர் பெருமானைப் போன்றவொரு செயல் வீரனைச் சைவத்தமிழ் உலகம் இன்றுவரை கண்டதும் இல்லை - இனிமேற் காணப்போவதும் இல்லை. அத்தகைய மகத்தான வீரனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் நம் பிறவிக்கடன் தீராது. ஆனாலும் சைவத் தமிழ் உலகமே ஒன்றிணைந்து நாவலர் கனவுக்குச் செயலுருவம் கொடுக்கும் செயற்பாட்டுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் 'நாவலர் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்திய தேரினை அனைவரும் ஒன்றுசேர்ந்து வடம்பிடிப்போம். நாவலர் எண்ணங்கள் நனவாகட்டும். நம் சைவத்தமிழ் உலகெங்கும் நாவலர் பெருமான் புகழ் ஓங்கி ஒலிக்கட்டும்.

**விடைக்கொடிச் செல்வர் திரு.சின்னத்துரை தனபாலா**
*தலைவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை*



### நாவலரின் கனவு எம்மண்ணிலே நின்று நிலைக்கட்டும்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நம் சமூகத்தையும் நம்மவர் வாழ்வையும் உய்விக்க வந்த அவதார புருடர். தெளிந்த அறிவு - உன்னத ஆற்றல் - நெறிப்பட்ட ஒழுக்கம் - அடக்குமுறைகளுக்கு அஞ்சாத துணிவு - நீதியை நிலைநாட்டும் போராட்டக் குணம் - ஓய்வில்லாத செயலாற்றல் இப்படி ஒட்டுமொத்த ஆற்றலுந் திரண்ட வடிவமாய் நம்மண்ணில் உலாவிய நம்மை வழிப்படுத்த அரும்பாடுபட்ட பெருமகன் எங்கள் நாவலர் பெருமான்.அத்தகைய பெருமகனைக் கொண்டாடி மகிழ இத்தகைய ஒரு பிரகடனம் ஆஹா! எத்தகைய மகிழ்ச்சி

நாவலர் பெருமையை வளரும் நம் இளஞ் சந்ததியினரும் அறியத்தக்க வகையிலே எதிர்வரும் ஆண்டினை நாவலர் பெருமானுக்கான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி அதற்கேற்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் உயர் பணிக்கு அங்கீகாரம் நல்கிய பிரதமர் அவர்களுக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாவலரின் எண்ணங்கள் ஈடேறவும் அவரின் கனவுகள் இந்த மண்ணிலே நின்று நிலைக்கவும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. வே. கந்தசாமி**
*செயலாளர்,*
*அகில இலங்கை இந்துமாமன்றம்*



### நம் வாழ்விற்கு ஒளிதந்த பெருமகனின் எண்ணங்களுக்கு உயிரூட்டுவோம்!

சைவத் தமிழ் இனத்திற்கு ஒரு அடையாளம் தந்த எங்கள் பெருமகனார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதரித்த இருநூறாவது ஆண்டினை, 'நாவலர் ஆண்டு' என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனஞ்செய்ய, அதற்கு முழுமையானதொரு அங்கீகாரத்தை அரசாங்கம் மனமுவந்து வழங்கியுள்ளமை உண்மையிலே நம் சைவத்தமிழ் உலகம் செய்த தவப்பயன் எனக் கூறின் மிகையில்லை. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க கைங்கரியத்தை ஆற்றிய அத்தனை நல்லுள்ளங்களையும் நாம் அனைவரும் வாழ்த்தி மகிழ்வோம்.

நம் இனத்துக்கான அடையாளம் - நம் மொழிக்கான அந்தஸ்து - நாடுகடந்தும் நம்மவரைச் சீரோடு வாழவைத்த பெருந்தகை - சமுதாயம் செழுமை பெறக் கல்விக் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்பதையும் - அறத்தின்வழி நாம் வாழ ஆன்மிகம் வழிகாட்ட வேண்டும் என்று வாக்கினால் உரைத்து, வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற பெருமகனுக்கு - நம் தேசத்தின் தேசிய வீரருக்கு, நாவலர் ஆண்டு நல்லதோர் அர்ப்பணமாகட்டும்.

தன்னை உருக்கி, நம் வாழ்விற்கு ஒளிதந்த பெருந்தகையாளனை, நாம் போற்றிச் செய்யும் இத்தகைய பணிகள், வளரும் இளம் சந்ததிக்கு நல்லதோர் வழிகாட்டி. இத்தகு சீர்மிகு பணிகளால் நல்லதோர் உலகு செய்வோம். ஆத்மார்த்தமான பணியை நாவலர் பெருமானின் புனித ஆத்மா என்றும் ஆசிர்வதிக்கும் என்பது எம் நம்பிக்கை.

**செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.*
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.*

(C-3278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது அகவை ஆண்டினை நாவலர் ஆண்டாகப் பிரகடனஞ் செய்து முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்கள்



### எமது செயற்றிட்டங்கள்

- தேசிய வீரருக்கான முத்திரை வெளியீடு.
- நாவலர் பெருமானின் பெருமை கூறும் ஆவணப்படம்.
- நாவலர் பெருமானின் வரலாற்றுச் சாதனைகளைக் காட்சிப்படுத்தல்.
- நாவலர் பெருமானுக்கு நினைவுச் சின்னங்கள் தாபித்தல்.
- நாவலர் பெயரில் வீதிகள் அமைத்தல்.
- நாவலர் கலாசார மண்டபச் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.
- நாவலர் நமக்காகத் தந்த நூல்களை மீள் பதிப்புச் செய்தல்.
- நாவலர் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் மகாநாடுகள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நெறியின் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.
- நாவலர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி.
- முன் மாதிரி அறநெறிப் பாடசாலை அமைத்தல்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களைச் சைவ சமயிகளாக வாழச் செய்தல்.
- மாணவர்களுக்கான போட்டிகள்.
- ஆலயங்களைச் சமுதாய மையங்கள் ஆக்கும் வகையிற் செயற்படுதல்.
- நாவலர் ஞாபகார்த்த விருது வழங்கல்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் - சைவமும் தமிழும் தன்னிரு கண்களாய்ப் போற்றிய பெருமகன் - நல்லொழுக்கத்திற்கும் ஆன்மிக ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வி என்பதைச் சமூகத்திற்கு உணரவைத்த காருண்யன் - சைவத் தமிழ் உலகம் முன்னுதாரணமாகக் கொள்ளவெனப் பாதை வகுத்த கலங்கரைவிளக்கு - எங்களுக்காகவும் எங்கள் மதத்திற்காகவும் தன்னை உருக்கிய பெருமகன் - சைவத் தமிழ் மக்களின் கலங்கரை விளக்கு - எண்ணம், சொல், செயல் மூன்றும் சைவத்தமிழ் உலகம் சிறப்பதற்காய் அர்ப்பணித்த பெருந்தகை - எமது சமூகம் மீண்டெழப் பற்றுக் கோடாய்க் கொள்ளும் வழிகாட்டிச் சென்ற தன்னிகரில்லாத் தலைவன் - சைவத்தையும் தமிழையும் உய்விக்க வந்த அவதார புருஷர்.

தமிழ் வரலாற்றிலுஞ் சைவ சமய வரலாற்றிலும் ஆறுமுகநாவலருக்குத் தனியிடம் உண்டு. வரலாற்றில் அவர் சொல்லும் செயலும் எண்ணங்களும் எப்போதும் நிலைபெற்றிருக்கும். நாவலர் பெருமான் ஒரு சரித்திர புருஷர். சரித்திரம் உருவாக்கிய மகோன்னத புருஷர். அவர். ஒரு தனி மனிதப் புரட்சி வரலாற்றின் கதாநாயகன். தன் வாழ்நாளை ஒரு இனத்திற்காய் அர்ப்பணித்த செயல் வீரர். இத்தகைய பெருமைக்குரிய தலைமகனை நாம் என்றும் போற்றுவது நம் தலையாய கடமை.

சைவத் தமிழ் உலகால் என்றென்றும் வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய, சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இம் மண்ணிற் பிறந்த 200 ஆவது ஆண்டினை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

அந்த வகையிலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்களாவன,

- **தேசிய வீரருக்கான முத்திரை வெளியீடு**
  நம் தேசத்தின் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு வழிகாட்டிய தேசிய வீரர் நாவலர் பெருமானுக்கு நினைவு முத்திரை வெளியீடு செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தல்.

- **நாவலர் பெருமானின் பெருமை கூறும் ஆவணப்படம்**
  நாவலர் பெருமானின் வரலாற்றினையும் அவர்தம் சாதனைமிகு செயற்பாடுகளையும் சித்திரிக்கின்றவகையிலும் வளரும் இளம் சந்ததியினர் நாவலர் பெருமானைப் பற்றி அறியத்தக்க வகையிலும் ஆவணப்படம் வெளியிடல்.

- **நாவலர் பெருமானின் வரலாற்றுச் சாதனைகளைக் காட்சிப்படுத்தல்**
  நாவலர் பெருமான் நமக்காகச் செய்த சீர்மிகு பணியை, உயிரோட்டமான ஓவியங்களாக்கி அந்தப் பெருமகனின் வரலாற்றுக் காட்சிகளை, நாவலர் பெருமான் பிறந்த இடத்திலே அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்திலே காட்சிப்படுத்தல்.

- **நாவலர் பெருமானுக்கு நினைவுச்சின்னங்கள் தாபித்தல்**
  சைவ மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் சைவப் பாடசாலைகளிலும் புனிதம் பேணத்தக்க வகையிலே, நாவலர் பெருமானுக்கு நினைவுச் சின்னங்கள் தாபித்து அவற்றைப் பேணிப் பராமரித்தல்.

- **நாவலர் பெயரில் வீதிகள் அமைத்தல்**
  சைவ மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சைவத் தமிழ் உலகிற்கு முகவரி தந்த நாவலர் பெருமானின் திருப்பெயரில் வீதிகளுக்குப் பெயரிடும் பணிக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆக்கமும் ஊக்கமும் நல்குதல்.

- **நாவலர் கலாசார மண்டபச் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.**
  நாவலர்பெருமான் பிறந்த இடத்திலே அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தை நவீன வசதிகளோடு கூடிய நாவலர் பெருமான் நினைவிடமாக மாற்றுதல் - நாவலர் பெருமானுக்கு நாள்தோறும் வழிபாடு நடைபெறும் வகையிலே தனியான பகுதி அமைத்தல் முதலான அம்சங்களோடு, நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலருடைய நோக்கம் நிறைவேறும் வகையிற் செயற்பாடுகளை முன்னெடுத்து, நாவலர் பற்றிய முழுமையை நாவலர் கலாசார மண்டபத்திற் காணத்தக்க வகையிற் செயற்பாடுகளை முன்னெடுத்தல். அத்துடன் இம்மண்டபம் தொடர்பான செயற்பாட்டில் யாழ்.மாநகர சபையோடு இணைந்து செயலாற்றுதல்.

- **நாவலர் நமக்காகத் தந்த நூல்களை மீள் பதிப்புச் செய்தல்**
  நாவலர் பெருமானால் ஆக்கப்பட்ட, பதிப்பிக்கப்பட்ட, உரை வகுக்கப்பட்ட, பரிசோதிக்கப்பட்ட இன்னோரன்ன நூல்களை மீள்பதிப்புச் செய்தலும் அவற்றைப் பயனுறச் செயலாற்றுதலும்.

- **நாவலர் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் மகாநாடுகள்.**
  சைவ சமய மறுமலர்ச்சி, மொழிப் பயன்பாட்டிற் புதுமை செய்த நாவலர் பெருமானின் செயல்களுக்கு மேலும் ஊக்கம் நல்கும் வகையில் மகாநாடுகளை முன்னெடுத்து, நாவலர் காட்டிய தமிழ், சமய விழுமியங்கள் தொடர்பிலான இடைவெளிப் பகுப்பாய்வு நிலைகள் பற்றியும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றியதாயும் அமையும் வகையிலே மகாநாடுகளை முன்னெடுத்தல்.

- **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நெறியின் செயற்பாடுகளை விஸ்தரித்தல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற செயற்பாட்டின் ஓர் அங்கமாக இந்து சமயக் கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் ஆன்மிகப் பிரசாரகர் பயிற்சி நெறி, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள், சைவாகமக் கற்கைகள் முதலானவற்றை மேம்படுத்தல்.

- **நாவலர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி**
  நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தன்னாலான பங்களிப்பினை நல்குதல்.

- **முன் மாதிரி அறநெறிப் பாடசாலை அமைத்தல்.**
  அறநெறிக் கல்வியின் பிதாமகர் நாவலர் பெருமான் என்ற பெருமையோடு நாவலரின் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலே நாவலர் கலாசார மண்டபத்திலே முன்மாதிரியான அறநெறிப் பாடசாலைச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்.

- **அறநெறிப் பாடசாலை மாணவர்களைச் சைவ சமயிகளாக வாழச் செய்தல்**
  மாணவர்களை ஒழுக்க விழுமியப் பண்புள்ளவர்களாக வாழ வழிகாட்டுதல் மற்றும் சைவ மாணவர்கள் தீட்சை பெறுவதனை முக்கியத்துவப்படுத்தல்.

- **மாணவர்களுக்கான போட்டிகள்**
  பாடசாலை மாணவர்களிடத்தில் சமயப் போட்டிகளை நடத்துவதன் ஊடாக, சைவ சமய அறிவினை வளர்த்தல். பாடசாலைகளுக்கிடையே நாவலரினைச் சிறப்பிக்குமாறு விவாதப் போட்டிகள் நடத்தி, பிரதமர் கேடயம் வழங்குதல்.
  புதிர்ப் போட்டி - நாவலரின் வாழ்க்கை வரலாற்றினையும் நாவலர் பெருமான் தந்த நூல்களையும் உள்ளடக்கியதாக, (சைவ வினா விடை, பாலபாடம், ஆத்திசூடி முதலிய நீதி நூல்கள்) பாடசாலை மாணர் குழு நேரடியாகப் பங்குபற்றும் நிகழ்வு. நாவலர் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய சைவ சமயப் பொது அறிவு வினா விடைப் போட்டி போன்ற மாணவர்களின் ஆக்கத்திறன் ஆளுமைகளை வெளிக்கொணரத் தக்க வகையில் போட்டி நிகழ்வுகளை முன்னெடுத்தல்.

- **ஆலயங்களைச் சமுதாய மையங்கள் ஆக்கும் வகையிற் செயற்படுதல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களில் மகத்துவமான ஆலயங்களை ஆன்மிக நெறி பிறழாத வகையிலே சமுதாய மையங்களாக ஆக்கும் செயற்றிட்டத்திற்கு அமைவாக இந்து ஆலயங்களுக்கான ஒன்றிணைந்த நிர்வாக அலகினை உருவாக்கி சமுதாய மேம்பாடு நோக்கிய செயற்பாட்டை வலுப்பெற வைத்தல்.

- **நாவலர் ஞாபகார்த்த விருது வழங்கல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையிலே ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக அமைகின்ற ஆலய நிர்வாகங்கள், சமய நிறுவனங்கள், சமூக சேவையாளர்களுக்கு நாவலர் விருது வழங்கிக் கௌரவிக்கும் ஊக்கப்படுத்தற் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- **அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல்**
  விசேட ஆளுமைத் திறன்களை வெளிக்காட்டுகின்ற மாணவர்களுக்கு நிதிமூலம் ஒரு தடையாக இருக்காமல் அவர்களுக்கு இந்துப் பண்பாட்டு நிதியம் மூலமாகப் புலமைப்பரிசில் வழங்குகின்ற செயற்றிட்டத்தினை முன்னெடுத்தல்.

இச் செயற்பாடுகளில் நாவலர் சபை, இந்து மாமன்றம், சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை போன்ற சைவ சமயம் சார்ந்த நிறுவனங்கள் ஆலயங்கள் அறநெறிப் பாடசாலைச் சமூகத்தின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புகளுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தயாராகவுள்ளது. மேலும் அரச நிறுவனங்கள் என்ற வகையிலே அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புகளுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தயாராகவுள்ளது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

(C-3278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் சிக்கி மாடுகள் பலி

(குருமன்காடு)

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் சிக்கி மாடு ஒன்றும், இரண்டு கன்றுகளும் இறந்துள்ளதுடன், அவை உடனடியாகவே இறைச்சிக்காக வெட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மாட்டு உரிமையாளரால் பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு சொந்தமான மாடு ஒன்றும், இரண்டு கன்றுகளும் வீட்டின் அயற்பகுதியில் பன்றிக் காவலுக்கு பிறிதொருவரால் வைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி இறந்துள்ளன.

இறந்த மாடும், கன்றுகளும் உடனடியாக வெட்டப்பட்டு இறைச்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், மாட்டின் வெட்டப்பட்ட எச்சங்களே அப்பகுதியில் காணப்படுவதாக மாட்டு உரிமையாளரால் பொலிஸில் முறப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாடு தொடர்பில் வவுனியா, பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# காணி சுவீகரிப்பை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

போர் முடிந்து 13 ஆவது ஆண்டில் காலடி வைக்கும் போதாவது அரசு இந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் எமது ஆட்சியை நிறுவுவதை விட வேறு வழியில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கீரிமலையில் நேற்று காணி சுவீகரிப்பிற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

இப்போது சட்டத்தின் புதிய பிரிவுகளை பாவித்து காணிகளை சுவீகரிப்பு செய்வதற்கு முயல்கின்றது. அரசாங்கம் இதற்கு சரியானதொரு முடிவை எடுக்க வேண்டும். காணிகளை விடுவித்து மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

(4-5-104)

# மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும் மக்களின் காணிகள் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது என வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் சி.பி.ரத்நாயக்க மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பிரதேச செயலாளர்கள் தமது பிரிவில் வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது குறித்தும் குறிப்பாக மக்களின் பயன்பாட்டில் உள்ள பல ஏக்கர் விவசாயக்காணிகள் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் முன்வைக்கின்ற பல பிரச்சினைகள் உடனே தீர்க்க முடியாத காரணத்தினால் விசேட குழு ஒன்றை நியமித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பது என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

(4-5-285)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

விது நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விது நம்பிக்கை நிதியம் மற்றும் நற்குண முன்னேற்ற அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை-09 மணி முதல் மாதகல் மேற்கில் அமைந்துள்ள நற்குண முன்னேற்ற அமைப்பின் பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(4-5-18)

# காட்டு யானை தாக்கியதில் இரு விவசாயிகள் காயம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் வயல் காவல் கடமைகளுக்கு சென்ற இரு விவசாயிகள் மீது காட்டு யானை தாக்கியுள்ளது. இதன்போது காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், ஆண்டான் குளம், ஆலங்கடவை பகுதியிலுள்ள தமது வயல்களில் இரவு காவலை மேற்கொள்வதற்காக இருவர் சென்றனர்.

இதன்போது வயல்களுக்குள் திடீரென்று உள்நுழைந்த காட்டு யானைகள் வயல் நிலங்களை சேதப்படுத்தியதுடன் காவலில் ஈடுபட்டு கொண்டிருந்தவர்களையும் தாக்கியுள்ளது.

இதில் காயமடைந்த இரு விவசாயிகள் மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். (4-5-299)

# நீர் வழுங்கல் வசதிகள் தொடர்பில் வாசுதேவ தலைமையில் மீளாய்வுக் கூட்டம்



(நெளுக்குளம்)

வன்னி மாவட்டங்களின் நீர் வழங்கல் வசதிகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் முதன்மை அதிதியாக நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்து கொண்டார். கலந்துரையாடலில் வன்னி மாவட்டங்களின் நீர் வழங்கல் திட்டத்தின் முன்னேற்ற நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் செயற்படுத்தப்படவிருக்கும் சுகாதார மேம்பாட்டுத்திட்டம் மற்றும் மூன்று மாவட்டங்களிலும் நீர் வழங்கலில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே.காதர் மஸ்தான், கு.திலீபன், றிசாத் பதியுதீன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் அமைச்சரின் இணைப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(4-5-299)

# விபத்துக்களால் கிளிநொச்சியில் இவ்வாண்டு 42 மரணங்கள்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விபத்துக்களால் 42 மரணங்கள் இவ்வாண்டு பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் விபத்துக்கள் இடம்பெறுவது குறைவாகக் காணப்படுவதாகவும் நகரிற்கு அப்பாலுள்ள கரடிப்போக்கு தொடக்கம் பளை வரையான பகுதியிலும் 155ம் கட்டை தொடக்கம் இரணைமடு சந்தி வரையிலும் விபத்துக்கள் அதிகம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் இதன்போது தெரிவித்தனர். (4-5-100-316)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்

நாகலிங்கம் வீதி கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.**தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்** அவர்களின் மறைவுச் செய்தி எங்களுக்கு பெரும் துயரத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்தது.

அன்னார் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளமையும், நிலைய விளையாட்டு மைதானத்தை சுற்றி மதில் அமைப்பதற்கும் நிதி உதவி வழங்கியுள்ளமையும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3276)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய முன்னாள் நிர்வாக உறுப்பினர்களும், நண்பர்களும்.


# இந்திய இழுவைப் படகுகளை அகற்ற விரைவில் நடவடிக்கை

(முறிகண்டி)

கிளிநொச்சி கிராஞ்சி கடல் பரப்பில் 14 இந்திய இழுவைப் படகுகள் தரித்து விடப்பட்டுள்ள நிலையில் அவற்றை அகற்ற விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இந்திய இழுவைப்படகு விடயம் தொடர்பில் ஆராயப்பட்ட பொழுதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தரித்துள்ள இந்திய இழுவைப் படகுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது. அதிலிருந்து வெளியேறும் எண்ணெய் படலங்களால் சூழல்மாசு படுகின்றது.

அவற்றை இரும்புக்காக விற்பது அல்லது செயற்கை பாறைகளை உருவாக்கும் வகையில் கடலிற்குள் போடுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (4-5-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ விபத்து 27 பேர் உயிரிழப்பு, 28 பேர் காயம்



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டின் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்த 28 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒசாக்கா மாகாணம் கிஷி மோடோ நகரில் 8 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் அமைந்துள்ளது.


இந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் மருத்துவமனை, பாடசாலை மற்றும் பல்வேறு வணிக வளாகங்களும் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அந்த அடுக்குமாடிக் கட்டடத்தின் 4 ஆவது மாடியில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தின்போது வணிக வளாகங்களில் இருந்த பலர் சிக்கிக்கொண்டனர்.

சம்பவத்துக்கான காரணம் குறித்து தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (நி-5)

## நடிகர் விக்ரமிற்கு கொரோனா



(சென்னை)

நடிகர் விக்ரமுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதை அடுத்து அவர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். (நி-5)

## ஐ.நா. செய்தி தொடர்பாளருக்கு கொரோனா



(ஜெனிவா)

பூஸ்டர் தடுப்பூசி செலுத்திய நிலையில் ஐ.நா. சபை பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளார். (நி-5)

# வடகொரியாவில் சிரிப்பதற்கு தடை கிம் ஜாங் உன் அதிரடி உத்தரவு

(பியாங்யாங்)

வடகொரியாவில் கிம் ஜாங் இல் உயிரிழந்து பத்து ஆண்டுகள் ஆன நிலையில், 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மது அருந்துவதற்கும் சிரிப்பதற்கும் அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவை கடந்த 1948 ஆம் ஆண்டு உருவாக்கியவர் தான் கிம் இல் சங். இவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் நாட்டை ஆண்டு வந்தார். கடந்த 1994 ஆம் ஆண்டு இவர் இறந்த பிறகு அவருடைய மூத்த மகன் கிம் ஜாங் இல் ஜனாதிபதியானார்.

இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 17 ஆம் திகதி உயிரிழந்ததால், தற்போது வடகொரியாவை கிம் ஜாங் இல் இன் மூன்றாவது மகன் ஆன, கிம் ஜாங் உன் மூன்றாவது தலைமுறையாக ஆண்டு வருகிறார்.

இந்நிலையில், இந்த ஆண்டு அவரின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் என்பதால், அதை முன்னிட்டு மது பானம் அருந்துவதற்கும் சிரிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடகொரியர் ஒருவர் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் அவர் கூறுகையில்,

ஒவ்வொரு ஆண்டும் இவருடைய நினைவு தினத்தில் 10 நாட்கள் துக்க நாட்களாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்த துக்க காலத்தில் மது அருந்தக்கூடாது. அப்படி மது அருந்தி கடந்த காலங்களில் பிடிபட்டவர்கள் பலர் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளாக நடத்தப்பட்டனர். ஆனால், அவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது தெரியவில்லை.

இன்றுவரை அவர்களை



மீண்டும் பார்க்கவில்லை. இந்த துக்க காலத்தில் குடும்ப உறுப்பினர் யார் இறந்தாலும் சத்தமாக அழக் கூடாது. அதே போன்று பிறந்த நாட்களை கொண்டாட முடியாது என்றும் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த துக்க நாட்கள் 10 நாட்களாக மட்டுமே இருந்தன. ஆனால் இந்த ஆண்டு 10 ஆவது ஆண்டு நினைவு தினம் என்பதால் ஒருநாள் அதிகரிக்கப்பட்டு, 11 நாட்கள் துக்க நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# இந்தியாவின் துர்கா பூஜைக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்

(டில்லி)

இந்தியாவின் பாரம்பரிய துர்கா பூஜை, இந்த ஆண்டு யுனெஸ்கோ உலக பாரம்பரிய நிகழ்ச்சி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

துர்க்கா பூஜை இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தாவில் மிகவும் விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில், மகிழ்ச்சி தெரிவித்து இந்திய பிரதமர் மோடி தெரிவித்துள்ளதாவது: நம 'பெருமிகு கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும், தேசிய ஒற்றுமையையும், துர்கா பூஜை வெளிப்படுத்துகிறது.

உலக பாரம்பரிய நிகழ்ச்சி பட்டியலில், துர்க்கா பூஜையை யுனெஸ்கோ சேர்த்துள்ளது. 130 கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு கிடைத்த பெருமை, மகிழ்ச்சி என தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உரையாடல் கலையில் உங்கள் பங்கு

நீங்கள் உங்கள் எல்லைக்கு உட்பட்ட அளவில் கலகலப்பாகப் பேசிக்கொள்கிறீர்களா? என்னது, இல்லையா?

ஊகும்! நட்டம் உங்களுக்குத் தான்.

ஏன் அப்படி என்கிறீர்களா?

உம்மென்று இருந்தவர்கள் உயர்ந்ததாக உலக வரலாற்றில் ஓர் உதாரணம் கூட இடம் பெறவில்லை.உங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் கனிவாகப் பேசிக் கொள்கிறீர்களா? உங்களைப் பற்றி அவர்களுக்கு உயர் மதிப்பு ஏற்படும்.

ஆண்கள் குறைவறப் பேசிக் கொள்ளலாம். பெண்கள், உணவில் சேர வேண்டிய உப்பைப் போல அளவோடு பேசிக் கொள்ளலாம்.

சிலர், பேசுவது என்பதைத் தங்களைப் பற்றிய தம்பட்டம் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.மாறாக, மற்றவர்கள் விரும்பக் கூடிய நான்கு கேள்விகளைக் கேட்டுவிட்டு, அவற்றிற்கான பதில்களை ஆர்வமுடன் கவனியுங்கள். அவர்கள் உங்களை விரும்ப ஆரம்பித்துவிடுவார்கள். மேலும் இந்திரன் சந்திரன் என்று வெளியுலகத்தில் உங்களைப் பற்றிப் புகழ ஆரம்பித்து விடுவார்கள்.

புன்னகையுடன் உரையாடலில் கலந்து கொள்வது நல்லது. ஏற்றுக்கொள்ள முடியாத மற்றவர்களின் கருத்துக்களுக்கு, எதிர்வாதம் கூறாமல் புன்சிரிப்போடு நிறுத்திக் கொள்வது உகந்த செயலாக இருக்கும். ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களை மனம் திறந்து பாராட்டலாம். தவறில்லை.

உரையாடல் திருமண மண்டபத்தைப் பற்றி அமையலாமே தவிர, சுடுகாட்டைப் பற்றியதாக அமையக் கூடாது, அதாவது, மற்றவர்கள், விரும்பாத அவர்களது தோல்விகள், முரண்பட்ட எண்ணங்கள் ,குறைகள் ஆகியவற்றைப் பற்றி உரையாடல் அமையக் கூடாது.

தம் கருத்துக்கள் மதிக்கப்பட வேண்டும். தம் அருமை பெருமைகள் உலகிற்குத் தெரிய வேண்டும். தன்னுடைய அனுபவங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.என்றெல்லாம் எண்ணுவது மனித இயல்பு. இவற்றை மற்றவர்கள் உணர்ந்தால் அத்தகைய மற்றவர்கள் எல்லாராலும் விரும்பப்படுவது நிச்சயம். இத்தகைய விருப்பப்படும் தன்மை அளவிட முடியாத நன்மைகளை அள்ளிக்கொண்டு வந்து சேர்க்கும் என்பதை, அனுபவித்தவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

தாயாக இருந்தாலும் தாரமாக இருந்தாலும் நான்கு வார்த்தைகள் பேசவில்லையென்றால் வித்தியாசமாக எண்ண ஆரம்பித்துவிடுகிறார்கள். வீணான சந்தேகங்களை மனதில் தேக்கி வைக்கிறார்க்ள். கருத்து வேறுபாடுகளும் சண்டையும் சச்சரவும் பெருகுகின்றன.

முன்பின் தெரியாதவர்கள் நண்பர்கள் மூலமாக அறிமுகமாகிறார்கள். அவர்களிடம் முகம் கொடுத்துப் பேசாவிட்டால் திமிர் பிடித்தவன் என்ற பட்டத்தை நமக்கு மிக எளிதாகச் சூட்டி விடுகிறார்கள்.

நன்றாகப் பேசிக்கொள்வோமே!


நமக்கு என்னத்திற்குப் பொல்லாப்பு?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## உழைப்பை மறக்கலாமா?



அப்போது சிலர் மயிலுக்குத் தெரியாமல் அதன் தோகையிலிருந்து இறகுகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மான் அணிலைத் தேடியது. அணில் ஒரு குப்பைத் தொட்டியின் அருகில், மனிதர்கள் வீசிய கெட்டுப்போன ரொட்டித் துண்டுகளைத் தின்றுகொண்டிருந்தது.

அப்போது சிறுவர்கள் சிலர் அணிலைப் பிடிக்கத் துரத்தினார்கள். அணில் அவர்களிடம் அகப்படாமல் ஓடித் தப்பித்து, மீண்டும் வந்து அந்தத்ரொட்டித் துண்டுகளைத் தின்றது.

தன் நண்பர்களின் நிலைமையைப் பார்த்து மானுக்கு வருத்தமாகி விட்டது.

‘ஓ... நண்பர்கள் அருவிக்கரையே தஞ்சம் என்று கிடப்பதற்கான காரணம் இதுதானா?’ என்று நினைத்துக்கொண்ட மான், மனிதர்கள் கண்ணில்படாதவாறு பொழுதைக் கழித்தது.

மாலைப் பொழுது வந்தது. சற்று இருள் கவியத் தொடங்கியது. மனிதர்கள் அருவிக்கரையிலிருந்து விலகிச் சென்றார்கள்.

மான்மெதுவாகப் புதரின் மறைவிலிருந்து வெளியே வந்து, தன்நண்பர்களை அழைத்தது.

நண்பனைக் கண்ட குரங்கும் மயிலும் அணிலும் ஓடி வந்தன. மான் அவர்களிடம் ஏதும் அறியாதது போல், “நண்பர்களே, இரண்டு நாட்களாக நான் உங்களைத் தேடிக் கொண் டிருக்கிறேன். நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?” என்று கேட்டது.

அணிலும் குரங்கும் மயிலும், “நண்பா, நாங்கள் கடந்த இரண்டு நாட்களாக இங்கேதான் இருக்கிறோம். இங்கே மனிதர்கள் விதவிதமான உணவுகளை எங்களுக்குத் தருகிறார்கள். நாம் காட்டில் உணவுக்காக அலைந்து திரிய வேண்டியிருக்கிறது.

ஆனால், இந்த அருவிக்கரையில் ஒரிடத்திலேயே அமர்ந்து விதவிதமான உணவுகளை உண்ண முடிகிறது. நீயும் எங்களுடன் இங்கேயே தங்கிவிடு” என்றன.

“நண்பர்களே, இன்று காலையே நான் அருவிக்கரைக்கு வந்து விட்டேன். இங்கே என்ன நடக்கிறது என்பதை நானும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்” என்றது மான்.

“அப்படியா? நாங்கள் உன்னைப் பார்க்க வில்லையே. உனக்கும் உணவு கிடைத்ததா?” என்று வியப்புடன் கேட்டது குரங்கு.

“இல்லை, அப்படிக் கிடைத்தாலும் நான் அவற்றை உண்ண மாட்டேன். (தொடரும்)

# மகாபாரதம்

277



“தேவி! பாராட்டத்தக்க கேள்வி. இந்த உலகில் கொல்லாதவர் யாருமில்லை. நடக்கையில், நுண்ணுயிர்கள் பல மடிகின்றன.

உட்காரும் போதும், படுக்கும் போதும் கூட இருக்கையிலும், படுக்கையிலும் உள்ள நுண்ணுயிர்கள் இறக்கின்றன. நீரிலும், காற்றிலும் உயிரினங்கள் எண்ணற்றவை இருக்கின்றன.

பூமியில் இருக்கும் உயிர்களுக்குக் கணக்கு இல்லை. இப்படி நீரில், காற்றில், மண்ணில்உள்ள உயிர்கள் ஒன்று ஒன்றால் கொல்லப்படுகின்றன.

பலம் மிக்க பறவைகளும், மீன்களும் பலம் குறைந்த தம் இனங்களைப் புசித்து வாழ்கின்றன. சிறிய மீனைப்பெரிய மீன் கொல்லுதல் இயல்பாய் உள்ளது. புறா முதலான பறவைகள் புழு, பூச்சிகளை உணவாகக் கொள்கின்றன. ஆயிரக்கணக்கான உயிர்கள் பிற உயிர்களின் மாமிசத்தாலேயே உயிர் வாழ்கின்றன.

ஒருவன் உணவு என்னும் பெயரால் உயிருள்ள பொருட்களைப் பக்குவப்படுத்தி உண்கிறான். சில நாட்கள் சில தானியங்களை உண்ணாமல் உண்ணாநோன்பு இருப்பவன் கொல்லாதவனாகக் கருதப்படுகின் றான். உயிர்களைக் கொன்று தின்னாதவன் புண்ணியத்தைப் பெறுகிறான்.

உணவைத் துறப்பதால் உடல் வாடுகிறது. அப்படி உடல் வாடும் போது ஐம்பொறிகளும் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஐம்பொறிகளையும் மனதையும் அடக்கும் ஆற்றல் பெற்றவன் யாரினும் உயர்ந்தவன் ஆகிறான்.

இவ்வாறு உபவாசம் இருப்பது கொல்லாமைக்குக் காரணமாகிறது. இவ்வாறு நடப்பவன், பிற உயிர்களைக்கொன்று புசிப்பவன் அதிய அனைவரும் உயிர்க்குத் துன்பம் தருபவர்கள் என்று அறநூல்கள் கூறுகின்றன. பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதவர்களைப் பற்றிக் கூறுகிறேன். உண்பதற்கு ஏற்ற கிழங்குகளையும், கனிகளையும், இலைகளையும் உண்டு ஓவியம் போல் அசைவற்று இருப்பவன் தான் இம்சை செய்யாதவன்.

பொருட்களின் மீதுள்ள பற்றற்று எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் துறவு பூண்டு, வைராக்கியத்துடன், சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொள்பவரே பிற உயிர்க்கு துன்பம் செய்யாதவர் ஆவர்.

இத்தகையோர் உலகில்சிலரே. மனதில்எழும் ஆசையை அகற்ற வேண்டும். இதனால் புண்ணியம் பெருகும். தருமமும், அதருமமும் மனதில் எழும் எண்ணங்களாலேயே அமைகின்றன.

ஒரு உயிர் திரும்பத் திரும்ப பிறவி எடுப்பதும், இறுதியில் முக்தி அடைவதும் மனத்தாலே தான். முன்வினைப்பயன் காரணமாக உயிர்கள் விலங்குகளாகவும் பறவைகளாகவும் ஊர்வனவாகவும் பிறக்கின்றன.

அவ்வாறு பிறக்கும் உயிர்கள் பல்வேறு வகைப்பட்ட உடல்களுடன் ஆற்றலும் வலிமையும் கொண்டு பிறக்கின்றன. அப்படிப் பிறக்கும் பிராணிகள் தம் வினைக்கு ஏற்ப இன்ப துன்பங்களைப் பெறுகின்றன.

மரணமும் அப்படியே. ஒரு உயிர் எப்படி எங்கே எப்போது பிரிய வேண்டும் என்பது விதியால் அமைவதாகும்.

மரணத்தை எத்தகைய மகான்களாலும், அரசகளாலும், வீரர்களாலும் கூட மாற்றி அமைத்து விட முடியாது. இதுவரை மரணத்தை வென்றவர் இல்லை. விதி மிகவும் விழிப்புடன் உயிர் இனங்களைக் கவனித்துக் கொண்டிருக்கி றது. அதற்கு நண்பரும் இல்லை. பகை வரும் இல்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் உள்ளவன் ஆடை உடுப்பான்.
மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாரார்க்கு என்ன வேஷமோ இங்கே யாரார்க்கு எந்த மேடையோ...

ஒரு காலத்தில் வாழ்வே மாயம் என்ற பாடல் வரிகள் பலரையும் ஈர்த்திருந்தன.

காத்திரமான பாடல் வரிகளும் உலகநாயகன் கமலஹாசனின் நடிப்பின் உச்சமும் சேர்ந்து வாழ்வே மாயம் என்ற பாடலை அன்று பலரும் தம்மையறியாமலே உச்சரித்தனர். இந்த உச்சரிப்பு நீண்டகாலம் நிலைத்திருந்தது.

வாழ்வே மாயம் என்ற பாடலில் வருகின்ற ஒவ்வொரு வரிகளும் தத்துவம் மிகுந்தவை. சுருங்கக்கூறின் திருமூலர், பட்டினத்தடிகள் போன்ற சித்தர்கள் செப்பிய தத்துவப் பாடல்களுக்கு இணையாக வாழ்வே மாயம் என்ற பாடல் இருந்ததெனலாம்.

அந்த பாடலில்,

நாடகம் விடும் நேரம்தான் உச்சக் காட்சி நடக்குதம்மா...

என்ற வரிகள் விதியின் விளையாட்டை மிகத் துல்லியமாக விளக்கவல்லவை.

இந்தப் பாடல் வாழ்வே மாயம் என்ற திரைப் படத்தில் நோயின் உச்சக் கட்டத்தில் காட்சிப் படுத்தப்பட்டாலும் எங்கள் மண்ணில் நடந்த இறுதி யுத்தத்தின்போது, யுத்த களத்தில் சிக்குண்ட எம் உறவுகளின் நிலைமைக்கும் அந்தப் பாடல் வரிகள் பொருந்துவதாய் அமைந் தன.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கையேந்தியபோது, வெளிநாடுகள் கைவிரித்தன. சர்வதேச அமைப்புகள் எங்களைக் கைவிட்டு ஓடின.

அவர்கள் கருசனை காட்டியிருந்தால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இந்த மண்ணில் வாழ்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

அதற்கும் மேலாக, இன்று துன்பத்தின் பாரத்தைச் சுமக்கின்ற மண்ணாக எங்கள் தமிழர் தாயகம் மாறியிருக்கவும் மாட்டாது.

அந்தோ! மனிதப் பேரவலம் தமிழ் இனத்துக்கு நடந்தாயிற்று.

எனினும் இன்றுவரை அந்த அவலத்துக்கு நீதி கிடைக்கவில்லை. தீர்வும் தரப்படவில்லை.

இந்தநிலையில் இப்போது எம் தமிழ் மக்களிடம் இந்தியா சொல்கிறது எங்களை நம்புங்கள் என்று.

நம்பியிருந்த காலமெல்லாம் ஏமாந்த காலமாயிற்றே என்று கூறுவதற்கு எத்தனிக்கையில்,

சீனாவின் உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்குமென்கிறார் சீன நாட்டுத் தூதுவர்.

அந்தோ! உங்கள் நாட்டு ஆயுதங்கள் எங்கள் தமிழ் மக்களைக் கொன்றொழித்தபோது தமிழர்கள் உங்களுக்குத் தேவையற்றவராயினர்.

ஆனால் இன்று தமிழ் மக்களுக்கு உதவுவோம் என்கிறீர்கள். ஓ! எங்கள் தொடர்பில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் என்ன நடந்தாயிற்று.

ஈழத் தமிழர்கள் மீது ஏன் இத்துணை அன்பும் அரவணைப்பும்.

ஆம், வாழ்வே மாயத்தில் வரும் யாரார்க்கு என்ன வேஷமோ இங்கே யாரார்க்கு எந்த மேடையோ என்ற தத்துவமே தெரிகிறது.

# அரசியல் காரணங்களினாலேயே உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

## பஃப்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் காரணங்களுக்காக அரசாங்கம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க திட்டமிட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பின் (பப்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது வாக்காளர்களை அவமதிக்கும் செயலாகும். அரசாங்கம் அமுல்படுத்திய கொள்கைகள் தொடர்பில் பொது மக்களின் கருத்தை மதிப்பிடுவதை அரசாங்கம் தவறவிடும் என தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலை வருட இறுதியிலோ அல்லது 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலோ நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு என்றார்.

தற்போதைய COVID-19 நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் கீழ் தேர்தலை நோக்கி நகர்வதில் உள்ள சவால்களை பப்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒப்புக்கொண்டார்.

தேர்தலை ஒத்திவைக்கும் தற்போதைய நிர்வாகத்தின் முடிவு ஜனநாயக நடவடிக்கை அல்ல என ஹெட்டியாராச்சி கூறினார்.

பொதுமக்களின் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமை பறிக்கப்படுவது மிகுந்த கவலை அளிக்கிறது என்றார். (ம)

### பெண்ணுக்கு பாலியல் தொல்லை

## 70 வயது முதியவர் கைதாகி மறியலில்

(கரணவாய்)

வேலைக்கு செல்லும் பெண் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த 70 வயது முதியவர் ஒருவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கரணவாய் கிராமத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு சென்று வேலை செய்யும் பெண் ஒருவரை கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 70 வயது மதிக்கத்தக்க ஒருவர் பாலியல் தொந்தரவு செய்து வந்தார்.

ஏற்கனவே இவர் தொந்தரவு செய்து வந்த நிமித்தம் அந்தப் பெண் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். அவரை பொலிஸார் எச்சரிக்கை செய்து விட்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் நெல்லியடி நகரில் குறித்த பெண் பொருட்கள் வாங்கிக் கொண்டு நிற்கும்போது குறித்த முதியவர் பாலியல் சேட்டை விட்டுள்ளார்.

அந்தப் பெண் இது தொடர்பில் உடனடியாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததையடுத்து 70 வயது மதிக்கத்தக்க முதியவர் கைது செய்யப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். விசாரணையின் பின் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-60)

## வடக்கில் மேலும் மூவருக்கு கோவிட்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று மேலும் மூன்று பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப் படையில், முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் ஒருவர் (45 வயது பெண்), கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (70 வயது ஆண்), சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர் (57 வயது ஆண்) ஆகிய மூவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 19 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நீர்வேலிகூட்டுறவு ஆலை, நீர்வேலி, சிறுப்பிட்டி, செல்வமஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறி சந்தி, சிவப்பிரகாசம் வீதி, முகாமைத்துவ பீடம், மருத்துவபீட அரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேற்) லிமிடெட், மருத்துவபீடம், அச்சுகூடம் கே.கே.எஸ்.வீதி, கொக்குவில், மாவடி, திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி கொக்குவில், சைலோ- கோயில் வீதி, ஞானபாஸ்கரோதய வீதி, இலங்கநாயகி, கட்டப்பிராய், இருபாலை, கோப்பாய், கோப்பாய் கைதடி வீதி, கோப்பாய் மானிப்பாய் வீதி, மாதா கோவில் (கோப்பாய்), கோப்பாய் பயிற்சிக் கல்லூரி, பால்பண்ணை சந்தி இராஜவீதி, பூதர் மடம், வசந்தபுரம் ஆகிய இடங்க ளிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** நன்னீர் மீன் உற்பத்தி நிலையம், இரணைமடு விமானப்படை, பன்னங்கண்டி, இராமநாதபுரம், சின்னசந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## விருப்பத்துடன் வேலை செய்

❖ பகை, பொறாமை போன்ற தீய எண்ணங்களை வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் தோன்றிய இடத்திற்கே திரும்பி வந்து விடும்.

❖ நன்மை செய்வதே சமயவாழ்வின் சாரம்.

❖ எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். ஆனால், உங்களுக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அதை மட்டும் உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

❖ உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அஞ்ச வேண்டாம். அதையே துணிச்சலுடன் பின்பற்றுங்கள். ஒருபோதும் கோழையாக இருக்காதீர்கள்.

❖ தன்னை அடக்கிப் பழகியவன் வேறு எதற்கும் வசப்பட மாட்டான். அத்தகையவனே உலகில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.

❖ எந்த வேலையாக இருந்தாலும், அதை தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றிக் கொள்பவனே அறிவாளி.

❖ [illegible] சுயநலம் கொண்டு மற்றவர்கள் மீது [illegible] என்பது பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

35

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



## மங்கோலியாவின் வரலாறு

மங்கோலியாவின் சிதைந்திருந்த பழங்குடியினர் கி.மு. 1206 ஆம் ஆண்டில் டெமுஜின் என்ற போர் வீரரால் ஐக்கியப்பட்டனர், இவர் செங்கிஸ் கான் என்று பெயர் பெற்றார். அவர் மற்றும் அவரது வாரிசுகள் மத்திய ஆசியா, ரஷ்யா உட்பட ஆசியாவின் பெரும்பகுதியை வெற்றி பெற்று ஆட்சி செய்தனர்.

மங்கோலிய சாம்ராஜ்யத்தின் பலம் 1368 ஆம் ஆண்டில் சீனாவின் யுவானின் வம்ச ஆட்சியாளர்களின் தலைநகரத்தை வீழ்த்திய பிறகு வீழ்ச்சியடைந்தது. 1691 ஆம் ஆண்டில், சீனாவின் கிங் வம்சத்தின் நிறுவனர் மான்சஸ் மங்கோலியாவை வென்றார். "வெகுஜன மங்கோலியாவின்" மங்கோலியர்கள் சில தன்னாட்சி உரிமையை தக்க வைத்துக் கொண்ட போதிலும், சீனத் பேரரசருக்கு விசுவாசமான ஒரு சத்தியத்தை தங்கள் தலைவர்கள் சத்தியம் செய்ய வேண்டியிருந்தது.

மங்கோலியா 1691 மற்றும் 1911 இற்கிடையில் சீனாவின் ஒரு மாகாணமாக இருந்தது, அதன்பின்னர் மீண்டும் 1919 முதல் 1921 வரை சீனாவின் ஒரு மாகாணமாக இருந்தது. 1727 ஆம் ஆண்டில் ரஷ்யாவும் சீனாவும் கிஹக்டா உடன்படிக்கையில் கையெழுத்திட்ட போது தற்போதைய எல்லை வரையப்பட்டது.

மன்சு கிங் வம்சம் சீனாவில் பலவீனமாக வளர்ந்ததால், மங்கோலிய தேசியவாதத்தை ரஷ்யா ஊக்குவித்தது. மங்கோலியா தன் சுதந்திரத்தை 1911 இல் கிங் வம்சம் வீழ்ச்சியுற்றபோது அறிவித்தது. ரஷ்யர்கள் தங்கள் புரட்சியால் திசைதிருப்பப்பட்டபோது, 1919 இல் சீனப் படைகள் மங்கோலியாவை மீண்டும் கைப்பற்றியது.

எனினும், 1921 ஆம் ஆண்டு மங்கோலியாவின் தலைநகரான உர்காவில் ரஷ்யா ஆக்கிரமித்தது. 1944 இல் மங்கோலியா ஒரு ரஷ்ய செல்வாக்கின் கீழ் ஒரு மக்கள் குடியரசாக மாறியது. ஜப்பான் 1939 இல் மங்கோலியா மீது படையெடுத்தது, ஆனால் சோவியத்-மங்கோலிய துருப்புக்களால் பின்வாங்கியது.

மங்கோலியா 1961 இல் ஐ.நாவில் இணைந்தது. 1966 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் சீனாவை எதிர்கொள்வதற்கு மங்கோலியாவுக்குள் பெரும் எண்ணிக்கையிலான தரைப்படைகளை அனுப்பியது. மங்கோலியா தன்னை 1983 இல் தனது இனத்தைச் சேர்ந்த சீன குடிமக்களை வெளியேற்றத் தொடங்கியது. 1987 ஆம் ஆண்டில் மங்கோலியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விலகிச் செல்லத் தொடங்கியது. அது அமெரிக்காவுடன் இராஜதந்திர உறவுகளை நிறுவியது, 1989-1990 இல் பெரிய அளவிலான சார்பு ஜனநாயகம் எதிர்ப்புக்களைக் கண்டது.

1990 ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக ஜனநாயக ஆட்சி நடத்தப்பட்டது. 1993 இல் முதல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. மங்கோலியாவின் ஜனநாயக அமைப்பிற்கு அமைதியான சமரசம் தொடங்கியதிலிருந்து இரண்டு தசாப்தங்களில், நாடு மெதுவாக ஆனால் சீராக வளர்ந்து வருகிறது.

(குறிப்பு- செங்கிஸ்கான் பற்றி கூறுவதாயின், 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடகிழக்கு ஆசியாவில் இருந்து தோன்றிய செங்கிஸ் கான் உலகத்தையே நடுங்கச் செய்தார். உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆட்சியாளர்களில் ஒருவராக கருதப்படும் செங்கிஸ்கான் படையெடுத்து சென்ற வழியெல்லாம் பேரழிவையும் பலத்த உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தி, நாடு நகரங்களையும் தேசங்களையும் தனது முன்னால் மண்டியிடச் செய்தார்.

பல நாடுகளில் இரத்த ஆற்றை ஓடவிட்டு, எதிரிகளின் தலையை துண்டித்து மலையாக குவித்த செங்கிஸ்கான், நகரங்களை சூறையாடியபடியே, பீஜிங் முதல் மொஸ்கோ வரை பல நகரங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஒரு காலத்தில் மூன்று கோடி சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்கு பரந்து விரிந்திருந்தது மங்கோலியப் பேரரசு.


செங்கிஸ்கானின் வெற்றி போர்க்களத்தோடு முடிந்துவிடவில்லை. மற்றொரு களத்திலும் அவரது செயற்பாடு மிகவும் வியப்பளிப்பதாக இருக்கிறது. கிழக்கு மங்கோலியா எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் ஏறத்தாழ எட்டு சதவிகித ஆண்களில் மங்கோலிய ஆட்சியாளர்களின் குடும்பத்தின் தடயங்கள் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. உலகில் சுமார் ஒரு கோடியே 60 இலட்சம் ஆண்கள் அதாவது உலக ஆண்களில் 0.5% செங்கிஸ்கானின் பரம்பரையினர் என்று கூறுகிறது இந்த ஆராய்ச்சியின் முடிவுகள். அப்படியாயின் அவருக்கு எத்தனை மனைவிமார்கள்?

உலக வரலாற்றில் உலகம் முழுவதையும் வெற்றி கொண்டு ஒரு குடையின் கீழ் ஆள வேண்டும் என்ற பேராசை அல்லது வெறி கொண்ட பல மன்னர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.


அத்தகைய ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், மகா அலெக்சாந்தர், ஜெங்கிஸ்கான், நெப்போலியன் பொனபார்ட், அடால்ஃப் ஹிட்லர் ஆகியோர் ஆவர். இந்த நால்வரில் ஒவ்வொருவரும் பெருமளவு நிலப் பரப்பை ஆண்டனர். பெருமளவு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். தங்களுடைய சமகாலத்தவரின் வாழ்வில் அளவற்ற செல்வாக்கினைச் செலுத்தினர்.)

மங்கோலியாவின் அதிகாரபூர்வ மொழியாகக் கருதப்படும் கல்கா மங்கோல் மற்றும் மங்கோலியர்களில் 90% முதன்மை மொழி. மங்கோலிய மொழி, துருக்கிய மொழிகள் (கசாக், துவான் மற்றும் உஸ்பெக் போன்றவை) மற்றும் ரஷ்ய மொழி ஆகியவை பொதுவான பயன்பாட்டில் உள்ளன. மங்கோலியன் எண்கள் திபெத்திய எண்களிலிருந்து உருவாக்கப்பட்ட எண்கள் மற்றும் மங்கோலியன் மற்றும் தெளிவான எழுத்துக்களுடன் இணைந்து பயன்படுத்தப்படுகின்றன. மங்கோலியன் எண்கள் உரு 32 இல் காட்டப்பட்டுள்ளது. இது இந்து-அரபு எண் முறையைப் போன்றது.

உரு 32 மங்கோலியன் எண்கள்




மங்கோலியன் நாணயத்தாள்கள்



10 மற்றும் 20 துக்ரிக்கள்(Tughrik)

## பாலி (Bali)

பாலி (Bali) என்பது இந்தோனிசியாவில் உள்ள ஒரு தீவாகும். இது சுந்தா தீவுகளின் மேற்கு அந்தலையில், ஜாவாவுக்கும், லொம்பொக் தீவுக்கும் இடையில் அமைந்துள்ளது. நாற்பதாயிரம் ஆண்டுகளாக பாலி தீவில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஜாவாவிலிருந்து பலர் அங்கே குடியெயர்ந்துள்ளனர். பாலி தீவு இந்தோனேசியாவின் 33 மாகாணங்களில் ஒன்றாகும். இதன் தலைநகரம் தென்பசார் என்பதாகும். பாலினியர்கள், இந்தோனேசியாவின் பாலி தீவின் மக்கள். இஸ்லாத்தை கடைப்பிடிக்கும் பெரும்பாலான இந்தோனேசியர்களைப் போலல்லாமல், பாலினியர்கள் இந்து மதத்தை பின்பற்றுகிறார்கள். மூதாதையர் வழிபாட்டு முறைகள் மற்றும் உள்ளூர் ஆன்மிக நம்பிக்கைகளுடன் இணைந்த இந்து மதம். பலினியர்கள் மறுபிறவியில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மேலும் இறந்தவர்கள் தங்கள் ஆத்மாக்களை விடுவிப்பதற்காக தகனம் செய்யப்படுகிறார்கள். சாதி நடைமுறைகள் உள்ளன. இதன் கலை, கலாசாரம் குறிப்பாக நடனம், சிற்பம், இசை போன்றவை மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளன. இதனால் பாலி தீவு இந்தோனிசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. வரலாற்றின் மூன்று காலகட்டங்களில் பாலி மக்களின் குடியேற்றம் நடந்துள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 22 பேர்...

டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,720 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## விபரீத...

டுத்த இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உரும்பிராய் தெற்கு, செல்வபுரம் பகுதியை சேர்ந்த தீனுஷ் ரொசாந்தி (வயது - 24) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-60)

## ஒமிக்ரோன்...

பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சில பி.சி.ஆர் மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார்.

எனினும் அவர் தற்போது நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார். விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம், வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுப்பது தங்களுக்கும், உலகில் வேறு நாடுகளுக்கும் முடியாமல் போயுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## ஆபத்தை நோக்கி...

மேலும், பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை தளர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பில் சந்தேகம் எழுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 தொற்றுநோய் குறித்த தரவுகளின் அடிப்படையில் இந்தத் தளர்வைச் செய்துள்ளனரா? அல்லது யாரினுடையதாவது அழுத்தங்கள் காரணமாகக் இவற்றை செய்கின்றனரா? என்ற பிரச்சினை எங்களுக்கு உள்ளது.

எவ்வாறாயினும், கோவிட் -19 தொற்றுநோய் எதிர்காலத்தில் நாட்டில் அழிவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்றார். (ம)

## மாகாண சபைத்...

தல்களை பிற்போடுமாறு அமைச்சரவை தேர்தல் ஆணையகத்தை கேட்டுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் சட்டத்தில் இல்லை எனவும் அவர் கூறினார்.

எனினும் உள்ளூராட்சி தேர்தல்களை பிற்போடலாம் எனவும் அவர் கூறினார். மாகாணசபைகளிற்கான தேர்தல்களை மேலும் ஒரு வருட காலத்திற்கு பிற்போடுவதற்கான அனுமதியை கோரும் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் தேர்தல் ஆணையாளர் இதனைக் கூறினார்.

தேர்தலை பிற்போடுவது தொடர்பான அமைச்சரவையின்முடிவைதேர்தல்ஆணையகத்திற்கு அறிவிக்க உள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தார்.(ம)

## அமைச்சர்கள்...

இலாகா திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் காணிகளை சுவீகரிக்கும் விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காணிகள் விடயத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அமைச்சர்கள் வந்து வழங்க சொன்னாலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை. ஐந்தாறு வருடங்களாக செய்யாது இருக்கின்றார்கள்.

அண்மையில் வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலும் இவ்விடயம் தொடர்பிலான பிரச்சினையை தீர்க்கக்கூடிய வகையில் வடமாகாண ரீதியில் கூட்டத்தை ஏற்பாடு செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தேன் என்றார். (ம)

## சீனா, இந்தியா...

என நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிமாவோ பண்டாரநாயக்கா காலப் பகுதியில் இருந்து இலங்கையானது சீனாவுடனும் இந்தியாவுடனும் நெருக்கமான தொடர்புகளை பேணுகின்றது. அவருடைய காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது எமது நாடு நடுநிலையாக செயற்பட்டு இருந்தது.

தற்போதும் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடு நிலை காணப்படுகின்றது. அதனை நாம் ஜனாதிபதியுடன் பேசியே முடிவுகளை எடுத்து வருகின்றோம்.

நாம் எந்த நாடுகளுக்கும் எமது பகுதிகளை விற்கவில்லை. எந்த நாடுக்கும் சார்பாக செயற்படவும் இல்லை. இயற்கையான பகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு நாம் சில பகுதிகளை வழங்குகின்றோம். இதனால் எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். வடக்கில் இந்தியாவும் சீனாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும் என்றார். (ம-250,299)

## +715...

மேலும் 715 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 578, 439 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இராமர் பாலத்...

பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிட்ட இலங்கைக்கான சீன தூதுவர் மன்னார் - தாழ்வுபாடு கடற்படை முகாமை நேற்று முற்பகல் சென்றடைந்தார்.

அங்கிருந்து தமது தூதரக பிரதிநிதிகளுடன் கடற்படை படகுகளில் இராமர் பாலத்தை நோக்கி புறப்பட்டார்.

17 கடல் மைல் தொலைவிலுள்ள இராமர் பாலம் மணல்திட்டை சீன தூதுவர் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர்.

சுமார் 20 நிமிடங்களாக இராமர் பாலத்தில் இருந்த இலங்கைக்கான சீன தூதுவர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பின்னர் அங்கிருந்து புறப்பட்டனர்.

மன்னார் - தாழ்வுபாடு பகுதியிலுள்ள கடற்படை முகாமிற்கு திரும்பிய சீனத் தூதுவரிடம் இந்த பயணம் தொடர்பில் வினவியபோது, "இதுவே முடிவு, ஆனால் ஆரம்பமும் கூட" எனப் பதிலளித்தார்.

தலைமன்னாரில் இருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரை 32 கிலோமீற்றருக்குள் உள்ள 16 மணல் திட்டுக்களை கொண்ட பகுதி இராமர் பாலம் எனவும் ஸ்ரீ ராம்சேது என வணக்கத்திற்குரிய புனித பகுதியாகவும் பாரத மக்களால் போற்றப்படுகின்றது.

இந்த 16 மணல் திட்டுக்களில் 8 மணல் திட்டுக்கள் இலங்கைக்கும் எஞ்சிய 8 இந்தியாவிற்கும் உரியவையாகும். (ம)

## சீர்...

மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான சிறந்த தருணம் வந்துள்ளதாக, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுவதை தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு GSP வரிச் சலுகையை மீள வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்ற நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்திடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம், சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக சீரமைக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதிகள் 7 பேர் ஒன்றிணைந்த அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமை கவலையளிப்பதாகவும் அந்த ஒன்றிணைந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் என்பதற்கான சரியான வரைவிலக்கணம் - தடுத்து வைத்தல் தொடர்பிலுள்ள உத்தரவுகள் மற்றும் தான்தோன்றித்தனமான கைதிகளின் தடுப்பு தொடர்பில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளதன் பின்புலத்திலேயே இந்த ஒன்றிணைந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ம)


தன நிதானய
திகதி - 2021.12.17
சீட்டிழுப்பு இலக்கம் - 649
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 04 11 15 22

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2914
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 04 13 20 47

மஹஜன சம்பத
திகதி 2021/12/17
சீட்டிழுப்பு இலக்கம் 4619
ஆங்கில எழுத்து X | வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 5 4 3 0 7

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/12/17 | சீட்டிழுப்பு இலக்கம் 1647
சுப்பர் இலக்கம் 03 | வெற்றி இலக்கங்கள் 14 17 52 60

மெகா பவர்
திகதி 17/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0967
வெற்றி எழுத்து U | சுப்பர் இலக்கம் 03 | வெற்றி இலக்கங்கள் 09 23 30 37

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1422
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 17.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,940,000
வெற்றி இலக்கங்கள் 02 08 45 46 W

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3757
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 17.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,264,140
வெற்றி இலக்கங்கள் 16 20 53 59 S

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1596 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 17.12.2021 | தினம் வெள்ளி
வெற்றி இலக்கங்கள் S 33 40 42 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 50,000,000/=

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 17.12.2021
வெற்றி வாரம் 3308
வெற்றி இலக்கங்கள் 10 31 39 52
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,977,260/=

F 26 29 34 53
779
17.12.2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,338,900/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### நாட்டின் பெறுமதிவாய்ந்த

# 50 இடங்களை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



(கொழும்பு)

**தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக நாட்டிலுள்ள பெறுமதிவாய்ந்த 50 இடங்களை வெளிநாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்வதற்கு அவசியமான தயார்படுத்தல்களை அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, நாடு தற்போது முகங்கொடுத்திருக்கக்கூடிய மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் பரவலே காரணம் என்று ஆளுந்தரப்பினர் கூறு கின்றார்கள். கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி சுமார் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்வதற்காக நாட்டிலுள்ள மிகவும் பெறுமதிவாய்ந்த 50 இடங்களை வெளிநாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்வதற்கு அவசியமான தயார்படுத்தல்களை அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது. அதன் ஓரங்கமாக 6 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறும் நோக்கில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ள இடங்களில் டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையிலுள்ள விமானப்படைக்குச் சொந்தமான இடம், நாரஹென்பிட்டி, ஊருகொடவத்த, தும்முல்ல உள்ளிட்ட சில பகுதிகளிலுள்ள இடங்கள், மக்கள் வங்கிக்குச் சொந்தமான இடம், சதொச களஞ்சியசாலை இடம், வெளிவிவகார அமைச்சு கட்டடம், கிரான் ஓரியென்டல் ஹோட்டல், கபூர் கட்டடம், ஹில்டன் ஹோட்டல் ஆகியவையும் உள்ளடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பெறுமதிவாய்ந்த இடங்களும் சீனா, டுபாய், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தியா, மலேசியா, சுவிஸ்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் இலங்கையைச் சேர்ந்த சில நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன. (ம)

## வவுனியாவில் பெண் சுட்டுப் படுகொலை

### சந்தேகநபர் கைது

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவு பகுதியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து அவரை கொலை செய்தமை தொடர்பில் இளைஞர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவு பகுதியில் கடந்த புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் மீது இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 31 வயதான சத்தியகலா என்ற பெண் மரணமடைந்தார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெடுங்கேணி பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மரணமடைந்த பெண்ணின் உறவினரான 31 வயது இளைஞர்ஒருவரை அப்பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் கைது செய்தனர்.

பொலிஸார் குறித்த இளைஞரை கைது செய்ய முற்பட்ட போது அவர் நஞ்சு அருந்தியுள்ளார். (ம-250,299)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL
(C-3215)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
கோப்பாய் புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3237)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம். அச்சுவேலி. சங்கானை வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9095)
076 825 7716 (ஆகாஸ்)

காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க
- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (பிரபல்யமான இடத்தில்)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு, 3 1/2 பரப்பு புதிய வீட்டுடன்
- யாழ். திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள்
- பலாலி வீதி கந்தர்மடத்தில் 1 1/2 பரப்பு காணி
- K.K.S வீதியில் 1 1/2 பரப்பு காணியுடன் கடை
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு
- யாழ். கைதடி A9 வீதியில் 14 பரப்புக் காணி
- யாழ். சத்திரத்துச் சந்தி கொட்டடி வீதியில் 3 பரப்பு காணி
- ஓமந்தையில் 14 ஏக்கர் தென்னந்தோட்டம்.

உடன் விற்பனைக்கு உண்டு.
இலங்கையில் எப்பாகத்திலும் கடைகள், காணிகள், வீடுகள் வாங்கவும் விற்கவும்.
தொடர்பு VIMB, வங்களாவடி, வேலணை.
077 522 1132
077 493 4336
074 174 6175
(9113)

தென்னந்தோட்டம் உடனடி விற்பனைக்கு
எழுதுமட்டுவாழ் A9 வீதியில் இருந்து 1 Km தூரத்தில் 453 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
( தரகர் தேவையில்லை )
(9096)
077 232 0176
077 239 0780

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9118)
தொடர்புகளுக்கு
077 814 7389, 070 705 1655

PERSONAL CLASS
இரசாயனவியல் A/L 2021 - 2022
Repeat Batch, Past Papers
கற்பிக்கப்படும்.
சி.அங்கதன் B.Sc (Chem.spl.)
075 436 4510
(9116)

ரிப்பர் வாகனம் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள இரண்டு கியுப் அளவுடைய L.H தொடர் இலக்கம் கொண்ட டாடா ரிப்பர் வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.
(9117)
077 220 8410

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், மயிலிட்டி B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(C-3281)
076 890 9259
077 015 0353

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(Lanka Farm அருகாமையில்)
1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(9119)
077 658 5999
077 623 4204


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.